முன்னேற்ற அறிக்கை

2019

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

தேசிய கல்வி நிறுவகம்

முகாமைத்துவ சபை

கலாநிதி. (திருமதி) டி. ஏ. ஆர். ஜே. குணசேகர
பணிப்பாளர் நாயகம்

சங். (கலாநிதி) மாம்புள்கொட சுமனரத்ன தேரர்
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியற் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

திரு. கே. டப்ளியு. பி. எம். பி. விஜேசுந்தர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்

திரு. என். வி. ஏ. எஸ். சமரசிங்க
பிரதிப்பணிப்பாளர் நாயகம் (பதில்)
ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக்கல்விக்கான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

பணிப்பாளர் சபை

திரு. டி. ஏ. ஜயலால்
பணிப்பாளர்
தகவல் தொழில்நுட்பத்துறை

திரு. ஆர். எம். பி. சி. ரணசிங்க
பணிப்பாளர்
இலத்திரனியற் பரவற் துறை

திரு. கே. ஆர். பத்மசிறி
பணிப்பாளர்
கணிதத்துறை

கலாநிதி. திரு. எஸ். ஏ. டி. சமரவிர
பணிப்பாளர்
ஆங்கில மொழித்துறை

கலாநிதி. (திருமதி) வி. டி. சி. பி. பெரேரா
பணிப்பாளர்
வெளியக வள முகாமைத்துவ அலகு

திருமதி. எம். பி. ஆர். தனவர்த்தன
பணிப்பாளர்
சமூக விஞ்ஞானத்துறை

திருமதி. ஏ. கே. ஏ. ஆர். அழகக்கோன்
பணிப்பாளர்
பொறியியற் சேவைகள் துறை

திருமதி. டி. மாலனி
பணிப்பாளர்
நிதித்துறை

திரு. எம். ஆர். டப்ளியு. மத்தும
பணிப்பாளர்
சிங்கள மொழித்துறை

திருமதி. ஜி. எச். அசோகா
பணிப்பாளர்
பாரம்பரிய, பிற நாட்டு மொழிகள் மற்றும் இரு மொழிக் கல்வித்துறை

திரு. டி. எம். பலிஹக்கார
பணிப்பாளர்
கல்வி, நிர்வாகம் மற்றும் அபிவிருத்தித்துறை

கலாநிதி. திரு. ஏ. டி. ஏ. த சில்வா
பணிப்பாளர்
விஞ்ஞானத்துறை

கலாநிதி. (திருமதி) பி. எம். குசுமாவதி
பணிப்பாளர்
வணிகத்துறை

திருமதி. ஆர். எம். கே. த சில்வா
பணிப்பாளர்
முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

கலாநிதி. திரு. டி. கெப்பெடிகொட
பணிப்பாளர்
ஆய்வு மற்றும் அபிவிருத்தித்துறை

திருமதி. எம். ஏ. ஐ. பி. பெரேரா
பணிப்பாளர்
பரீட்சைகள் துறை

உள்ளடக்கம்

பகுதி 1 : முன்னேற்ற அறிக்கை

பகுதி 2 : கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பகுதி 3 : நிதிக்கூற்றுக்களுக்கான விளக்க அறிக்கை

பகுதி 4 : நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு

தேசிய கல்வி நிறுவகம்

முன்னேற்ற அறிக்கை – 2019

1.0 அறிமுகம்

1.1 நிறுவனத்தின் நோக்கங்கள்

1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்படி நிறுவப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவகம் கீழ்வரும் நோக்கங்களை எய்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

(அ) இலங்கையில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள் என்பன தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) கல்வியின் பல்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் கல்விக்கு ஏற்பாடு செய்தல், அதனை மேம்படுத்தல்.

(இ) கல்வி முறைமையின் நிறைவேற்றுகை, இலக்குகள், அமைப்புகள், உள்ளடக்கம், முறைமையியல் என்பன உட்பட கல்வி முறைமையின் மீதும், கல்வியின் சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அம்சங்கள் மீதுமான கற்கைகளை நடாத்துதல், மேம்படுத்துதல்.

(ஈ) கல்விசார் நோக்கங்களுக்காகத் தொழினுட்பவியலின் இசைவாக்கம் உட்பட, கல்வி முறைமையில் புத்தாக்கப் பயில்வுகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல்.

(உ) கல்வி முறைமையிலுள்ள ஆளணியினரின் உயர் தொழில், முகாமைத்துவத் தகைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(ஊ) கல்வித் துறையின் நிபுணத்துவ சேவைகளை அரசாங்கத்துக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் கிடைக்கச் செய்தல்.

(எ) அரசுக்கும், ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் கிடைக்கத்தக்க கல்விமுறையில் விசேடத்துவ சேவைகளை உருவாக்குதல்; அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல்.

(ஏ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படல்.

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை முறைமையினது கலைத்திட்ட அபிவிருத்தி, கல்வித் துறையில் ஈடுபட்டவர்களினது வாண்மை விருத்தி, கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்தல் முதலியனவற்றிற்குப் பொறுப்பாகவிருக்க

உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன்படி உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் கேள்விகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் தலைமைத்துவத்திற்கானவாண்மைத்தேர்ச்சிகளை பாடசாலை முறைமைக்கு வழங்கல் விஞ்ஞான ரீதியிலான தக்வல்களை வழங்கக்கூடிய ஆய்வுகளுக்காக வழிகாட்டல் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான கொள்கைகளை உருவாக்க வசதியளிக்கின்றது. அதன்படி, தேசிய கல்வி நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்துவதற்காக, அதன் பொறுப்புகள் ஐந்து பீடங்களிடமும் ஒரு பிரிவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போதுள்ள கலைத்திட்டக் கொள்கைகளுக்கு அமைவாக கலைத்திட்ட மறுசீரமைப்பானது 8 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும். 2006 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட கலைத்திட்டமானது 2010 ஆம் ஆண்டுவல்வேறு மாற்றங்களோடு தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டமாக 2012 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். அமுல்படுத்தப்பட்ட 8 ஆண்டுகளையுடைய கலைத்திட்டமானது அடுத்த கட்டமாக 2015முதல் பின்வரும் முறையியல்களுக்கமைய பங்கீடு செய்யப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- தேசிய கல்வி நிறுவக கலைத்திட்ட உருவாகக்கக்குழுவினரால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் ஊடான தகவல்களின் அடிப்படையில் பாடசாலை முறைமையில் ஒவ்வொரு குழுவினரோடு தொடர்புபட்ட கலைத்திட்டஆய்வுகளை அமுல்படுத்தி தகவல்களை வெளிப்படுத்தல்.
- பல்வேறுபட்ட சமூகக்குழுக்களினது சார்புடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வெளிப்படுத்தல்.
- கலைத்திட்ட அமுல்படுத்தல்; விருத்தி செய்தல் தொடர்பில் பல்வேறுபட்ட நாடுகளினது வெற்றிகரமான அனுபவங்களைப் பகிர்தல்.
- ஒவ்வொரு பாடப்பரப்பிற்குள்ளும் முழுமைப்படுத்தப்பட்ட புத்தறிவினையும் கற்பித்தல் முறைமைகளையும் சேர்த்துக் கொள்ளல்.

2019 ஆம் ஆண்டில் பாடசாலைக் கலைத்திட்டத்தினபிரதான குறிக்கோளாவது 5 ஆம் தரத்திற்காக நியாயிப்புச் செய்யப்பட்டகலைத்திட்டத்தினைசெயல்படுத்துதல், பாடசாலை மட்டத்தில் அவை செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் தரம் 4 ஆசிரியர் வழிகாட்டியைத் தயாரித்தல் மற்றும் 2020 இல் மாகாண பயிற்றுவிப்பாளர்களுக்கு தரம் 5 ஆசிரியர் வழிகாட்டியை அமுல்படுத்துவதற்காகபயிற்சியளித்தல்.

மேலும்,"2020 க்கு அப்பால்" ஆழமான ஆய்வுகள் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் அளிப்புகள், கலந்துரையாடல்கள்மற்றும் விவாதங்கள் செய்யப்பட்டன. இதன் முடிவுகள் மூலம் 2019 ஆம் ஆண்டில் தரங்கள் 6-11 க்கு கலைத்திட்ட சட்டகங்களின் வரைவுகள் தயாரிக்கப்பட்டன.

1.2 நிதியிடல்

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கலைத்திட்டம்தொடர்பான நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள்ஆரம்பத்தில் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டம் (GEMP) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினூடாகவும் (UNICEF) மற்றும்கல்வி அமைச்சின் நிதிகள் மற்றும் நிறுவனத்தின் வருமானம் ஆகியவற்றால் வழங்கப்பட்டன.கல்வி அமைச்சிலிருந்து மீப்பேயில் SACTD விடுதி வளாகத்தை நிர்மாணிப்பதற்கான மூலதன செலவினத்திற்கான திரண்ட நிதி (CF) ஒதுக்கப்படவில்லை.

கீழ்வரும் அட்டவணை 2019 ஆம் ஆண்டின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றது.

நிதிமூலம்	நடைமுறைச் செலவினம் (ரூபா மில்லியன்களில்)		மூலதனச் செலவினம் (ரூபா மில்லியன்களில்)	
	திருத்தப்பட்ட ஒதுக்கீடு	உண்மைச் செலவினம்	திருத்தப்பட்ட ஒதுக்கீடு	உண்மைச் செலவினம்
திரண்ட நிதி (CF)	465,000,000	458,034,332	90,000,000	64,879,905
GEMP	25,000,000	25,000,000	-	133,669,481
நிறுவன வருமானம் (தே.க.நி)	178,089,000	141,819,716	292,083,000	-
ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF)	15,000,000	15,000,000	-	-
கல்வி அமைச்சு (CF)	145,000,000	131,059,685	150,000,000	-
கொரிய தேசிய யுனெஸ்கோ ஆணையகம் (KNCU)	4,200,000	4,157,904	-	-

1.3 ஆளணி

பாராளுமன்றச் சட்டத்தினூடாக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிக்ளை நிறை வேற்றுவதற்கு மேலதிகமாக அமுல்படுத்த 13 வருடங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம், பாடசாலை மட்ட கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தேசிய கல்வி நிறுவகத்திடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை, பெருமளவான ஊழியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையிலும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங் கொடுத்து மேற்கூறிய பணிகளை பெரும் அர்ப்பணிப்புடன் 2019 ஆம் வருடத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.


கீழ்வரும் அட்டவணை2019 ஆம் ஆண்டின் முடிவில் காணப்பட்ட நிறுவனத்தின் ஆளணி நிலைமையாகும்.

பதவி	01-01-2019 இன்படி அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்	31-12-2019 இன்படி பணியில் உள்ள உத்தியோகத்தர்கள்			31-12-2019 இன்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை
		ஆண்	பெண்	மொத்தம்	
1. பணிப்பாளர் நாயகம்	01	00	01	01	00
2. மேலதிக பணிப்பாளர் நாயகம்	01	01	00	01*	00
3. பிரதிப் பணிப்பாளர் நாயகம்	06	02	00	02	04
4. பணிப்பாளர்	27	09	08	17	10
5. சபைச் செயலாளர் (கல்வி)	01	00	01	01**	00
6. சிரேஷ்ட விரிவுரையாளர் / சிரேஷ்ட கல்வியியலாளர்	72	33	37	70	02
7. விரிவுரையாளர்/ கல்வியியலாளர்	75	05	05	10	65
8. உதவி விரிவுரையாளர் / உதவி கல்வியியலாளர்	90	37	50	87***	03
9. கல்விசாரா உத்தியோகத்தர்	379	143	174	317****	62
10. மொத்தம்	**652**	**230**	**276**	**506**	**146**

* ஒப்பந்த அடிப்படை(01), ** நாளாந்த சம்பளம் பெறுவோர் (01), *** மாற்று அடிப்படை(04), **** தற்காலிக/ஒப்பந்த அடிப்படை/ நாளாந்த சம்பளம் பெறுவோர(07).

நிறுவனமானது 36 உதவி விரிவுரையாளரகள் பதவிகள் உட்பட 56 ஊழியர்களை நீண்டகாலமாக வெற்றிடங்களாகவிருந்த பதவி நிலைகளுக்கு, 2019 இல் பல்வேறு முயற்சிகளினூடாக் நிரப்பியிருந்தது

கீழ்வரும் அட்டவணை2019இல் கல்விசார் ஆளணியைதகைமைகளின் அடிப்படையில் காட்டுகின்றது.



2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு

2.1 2019ஆம் ஆண்டுக்கான பேரவை

தேசிய கல்வி நிறுவக சட்டப் பிரமாணங்களுக்கு ஏற்புடைய விதத்தில் பேரவை பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

- யாப்பு ஒழுங்கு விதிகளினால் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களின் திட்டத்திற்கான செயற்பாடுகளுக்கமைய நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை நியமித்தல்;
- நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் சேவைகளுக்கான கால அளவு மற்றும் நிபந்தனைகள், நாட்கூலிகள், சம்பளம் அல்லது ஏனைய ஊதியங்களைத் தீர்மானித்தல்;

- ஒழுக்கக் கட்டுப்பாடு சம்பந்தமான விடயங்களின் விதிகளை ஆக்குதல்;
- நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் நன்மைக்கான சேமலாப நிதியத்தை ஒழுங்கு செய்தலும் அமைத்தலும் அத்துடன் அவ்வாறான நிதியங்களுக்கு அல்லது திட்டத்திற்கு ஏற்பாடுகளைச் செய்தல்.

தேசிய கல்வி நிறுவகச் சட்டதிட்டங்களின்படி, நிறுவகத்திற்கு நிதியைக் கையாளும் மற்றும் நிர்வாகத்தை நடத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு பேரவையில் பின்வரும் உறுப்பினர்கள் சேவையாற்றினார்கள்.

திரு. பத்மசிரி ஜயமான்ன (செயலாளர், கல்வி அமைச்சு)	-	தலைவர் (மார்ச் 2019 வரை)
திரு. எம். என். ரணசிங்க (செயலாளர், கல்வி அமைச்சு)	-	தலைவர் (ஏப்பிரல் - ஒக். 2019 வரை)
கலாநிதி (திருமதி) ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர (பணிப்பாளர் நாயகம், தே.க.நி)	-	உறுப்பினர்
திரு. திஸ்ஸ ஹேவாவித்தாரண (இராஜாங்கச் செயலாளர், கல்வி அமைச்சு)	-	உறுப்பினர்
திரு. எஸ். எச். குமாரசிங்ஹ (ஓய்வுபெற்ற அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு 07)	-	உறுப்பினர்
பேராசிரியர் பி. எஸ்.எம். குணரத்ன (உப தலைவர்,பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு)	-	உறுப்பினர்
கலாநிதி(திருமதி) ஹேமமாலா ரத்வத்த (சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கற்கைகள் துறை, திறந்த பல்கலைக்கழகம்)	-	உறுப்பினர்
திரு. எம். கே. பிரதீப் குமார (பணிப்பாளர்,(21.02.2019 வரை) வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், நிதி அமைச்சு)	-	உறுப்பினர்

திரு ஈ.ஏ. ரத்னசீலா - உறுப்பினர்
(பணிப்பாளர் , நிதித் துறை, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு)(16.04.2019 முதல்)

திரு. ஏ. எம். ஆர். பி. அமரக்கோன் - உறுப்பினர்
(முன்னாள் ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்)

கலாநிதி. ஹர்ஷ சுபசிங்க - உறுப்பினர்

செல்வி எம். எம். கிரிசாந்தி - உறுப்பினர்
(பணிப்பாளர், அரசுசார்பற்ற உயர்கல்வி அலகு)

பேராசிரியர் ஜயதேவ உயங்கொட - உறுப்பினர்
(ஓய்வுநிலைபேராசிரியர், (28.02.2019முதல்)
அரசியல் விஞ்ஞானத்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்)

திருமதி. டி. எல். பி. சி. சேனநாயக்க - செயலாளர்
(ஒப்பந்த அடிப்படை) (01.01.2019இலிருந்து)

2.2 கல்விசார் அலுவல்கள் சபை 2019

பேரவையை விடகல்விசார் அலுவல்கள் சபையானது, கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஏனைய பொருத்தமான துறைகளின் நிபுணர்களைக் கொண்டுள்ளது. இது அனைத்து கல்விசார் அலுவல்கள் மற்றும் கல்விசாரா மற்றும் நிறுவனம்சார் தலைமைத்துவம், மேற்பார்வை, அத்துடன் ஆலோசனை சேவைகள் என்பவற்றை வழங்குகின்றது.

- எல்லா கல்விசார் விடயங்களுக்கும் பேரவைக்கு ஆலோசனை வழங்கல்.
- பேரவையினால் முன்வைக்கப்படும் எந்த விடயம் தொடர்பாகவும் கவனம் செலுத்துதலும் அறிக்கையிடலும்.
- நிறுவகம் நடத்துகின்ற அல்லது நிறுவகத்தில் நடக்கின்ற கற்றல் தொடர்பான பாடநெறிகள், பயிற்சி நிகழ்ச்சி /நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் பற்றி பேரவைக்கு சிபார்சுகளும் அறிக்கையும் வழங்குதல்.

- பாடநெறிகள், பயிற்சி நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மற்றும் நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் என்பவற்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்குத் தேவையான சிபார்சுகளை பேரவைக்குத் தெரிவித்தல்.
- கற்றலுக்கான பாடநெறிகள் சார்ந்த ஒழுங்கு விதிகளை வரைந்தும், கற்பித்தல் நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மற்றும் நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகள் என்பவற்றுக்கான விதிகளை வரைந்து அவ்வித வரைவுகளைப் பேரவைக்குச் சமர்ப்பித்தல்.
- நிறுவகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளின் பரீட்சகர்களாக நியமிப்பதற்குப் பொருத்தமான நபர்களை பேரவைக்குச் சிபார்சு செய்தல்.
- கண்காட்சிகளுக்கான விருதுகள் மற்றும் ஏனைய பரிசில்கள், புலமைப்பரிசில்கள், பதக்கங்கள் மற்றும் படிகங்கள் என்பவற்றைப் பெறத் தகுதியான பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களின் பெயர்களை பேரவைக்குச் சிபார்சு செய்தல்.
- பேரவையின் அனுமதியோடு, சபை உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனையவர்களை உள்ள டக்கும் குழுக்களை நியமித்தல்.

பின்வரும் கல்விசார் நிபுணர்களை, கல்விசார் அலுவல்கள் சபை 2019 இல் கொண்டிருந்தது.

பேராசிரியர் ஜயதேவ உயங்கொட (ஓய்வுபெற்ற பேராசிரியர், அரசியல் விஞ்ஞானத்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்)	-	தலைவர்
கலாநிதி (திருமதி) ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர (பணிப்பாளர் நாயகம், தே.க.நி)	-	உறுப்பினர்
பேராசிரியர் ஆர். அரங்கல (பேராசிரியர், சிங்கள மொழித் துறை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)	-	உறுப்பினர்
திரு. கே. எம்.எச். பண்டார (பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்வி, கல்வி அமைச்சு)	-	உறுப்பினர் (05.03.2019 வரை)
திரு பி.டி.சி. பியன்வில-உறுப்பினர் (பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்வி, கல்வி அமைச்சு)		(10.05.2019 முதல்)
திரு. ஈ. கே. கனிகிகம (சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு), சமூகவியல் துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)	-	உறுப்பினர்

கலாநிதி ஆர். யூ. ஹல்வத்துற - உறுப்பினர்
(குடிசார் பொறியியல் துறை, மொறட்டுவ பல்கலைக்கழகம்)

செல்வி. டபிள்யு. டி. பி. நாலிகா - உறுப்பினர்
(ஆணையாளர் நாயகம்,(03.05.2019வரை)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வியமைச்சு)

கலாநிதி எம். ரி. எம். மஹ்ரீஸ் - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூகவியற் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்)

கலாநிதி மஹிம் மெண்டிஸ் - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூக விஞ்ஞானங்கள் துறை, திறந்த பல்கலைக்கழகம்,
இலங்கை)

திரு டபிள்யூ.எம். ஜெயந்த விக்ரமநாயக்க - உறுப்பினர்
(ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,(05.03.2019 முதல்)
கல்வி அமைச்சு)

திரு. வி. முத்துக்குமாரசுவாமி - உறுப்பினர்
(முன்னாள் அதிபர்,
இந்துக் கல்லூரி, கொழும்பு – 04)

திரு. பி. சனத் பூஜித - உறுப்பினர்
(பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
தேசிய மதிப்பீடுகள் மற்றும் பரீட்சைகள் சேவை)

கலாநிதி பிரசாத் விமலரத்ன - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணினிப் பாடசாலை, கொழும்புப் பல்கலைக்கழகம்)

கலாநிதி பிரியந்த பிரேமகுமார - உறுப்பினர்
(செயலாளர்,
பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு)

சங்கைக்குரிய கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர் - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்)

திரு. என். வி. ஏ. எஸ். சமரசிங்க - உறுப்பினர்
(பதில் பணிப்பாளர் நாயகம்,
ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்விப் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்)

திருமதி. டி. எல். பி. சி. சேனநாயக்க - செயலாளர்
(ஓய்வுபெற்ற அடிப்படை)

பேரவையினதும், கல்விசார் அலுவல்கள் சபையினதும் வழிநடத்தல் மற்றும் மேற்பார்வை யின் கீழ் தேசிய கல்வி நிறுவகமானது,பின்வரும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் கீழ் தன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

2.3 பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்

பணிப்பாளர் நாயகத்தின்அலுவலகம்கீழ்வருமஒரு அலுவலகம், 02 அலகுகள் மற்றும் ஒரு துறையை உள்ளடக்குகிறது.

- பணிப்பாளர் நாயகத்தின்அலுவலகம்
- பரீட்சைகள் துறை
- உள்ளகக் கணக்காய்வு அலகு
- வெளியக மூலவள முகாமைத்துவ அலகு

பணிப்பாளர் நாயகத்தின் செயலகம், தேசிய கல்வி நிறுவகப் . பேரவைக்கும், கல்விசார் அலுவல்கள் சபைக்குமான ஆவணங்களையும் சுற்றறிக்கைகளையும் தயாரிப்பதற்கும், பதிவுகளைப் பராமரித்து பேரவைக்கு கல்விசார் சபையினதும் தீர்மானங்களைஉரிய பீடங்களுக்கும் பிரிவுகளுக்கும் அறிவிக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் பேரவையினதும், கல்விசார் அலுவல்கள் சபையினதும் நடவடிக்கைகளைக் கூட்டிணைக்கிறது. சென்ற வருடத்தின்போது 09 பேரவைச் சந்திப்புக்களும், 12 கல்விசார் அலுவல்கள் சபையின் சந்திப்புக்களும் நடைபெற்றன.

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற பல்வேறுபட்ட பாடநெறிகளை நியமங்களைக்கடைப்பிப்பதன் மூலம் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் மேற்கொள்வதற்கு பரீட்சைகள் துறை பொறுப்பு வாய்ந்ததாக திகழ்கின்றது. பல்வேறுபட்ட தொழில்சார் அபிவிருத்திப்

பாடநெறிகளை நடத்துவதில் தேசிய கல்வி நிறுவகம் சம்பந்தப்பட்டுள்ளமையால் சான்றிதழ் அளிக்கும் நோக்கங்களுக்காக திறன்மிக்க மற்றும் விளைதிறனான பரீட்சை முறைமையைக் கொண்டு செயற்படுகிறது. பரீட்சைகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்கல் என்பவற்றிற்காக, 2019ஆம் ஆண்டில் பரீட்சைகள் துறை கீழ்வருவனவற்றிற்காக பணியாற்றியிருந்தது.

- கணிதம் கற்பித்தலில் உயர் தராதரப் பத்திர பாடநெறி (இறுதி)
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி - 2017/2017(இறுதிப் பரீட்சை)
- மேலதிக மொழி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட டிப்ளோமா - 2018/2019(இறுதி)
- விசேட கல்வியில் டிப்ளோமா–2018(இறுதி)
- சைகை மொழி டிப்ளோமா –2018(இறுதி)
- இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான டிப்ளோமா – (2019)
- கல்வி இளமாணி 2017/2019பகுதி I (பொது)
- கல்வி முதுமாணிஇறுதிப் பரீட்சை (2017/2019)
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2019(மு/நே) –அரையிறுதி–I
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2018 (மு/நே) –அரையிறுதி–III
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2018 (முன்னைய குழுக்கள்)) – பரீட்சை(பழைய பாடத்திட்டம்)
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2018 (ப/நே) –அரையிறுதி–I I
- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா–2017/2018 –(இறுதிப் பரீட்சை)
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா–2019(மு/நே) –அரையிறுதி-II
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2020(ப/நே) –நுழைவுப் பரீட்சை

மேலதிகப் பரீட்சைகள்

- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2018 (மு/நே) - அரையிறுதி–I I
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா– 2018 (ப/நே) - அரையிறுதி–I
- பாடசாலை முகாமைத்துவத்தில் டிப்ளோமா (2017/2018)–அரையிறுதி–I I
- பாடசாலை முகாமைத்துவத்தில் டிப்ளோமா –நுழைவுப் பரீட்சை
- பட்டப்பின் படிப்பு கல்வி நிர்வாகம் (விசேட மீட்டல் பரீட்சை) பரீட்சை

உள்ளகக் கணக்காய்வு அலகு, நிறுவகத்தின் தலைமைக்கு நேரடியாக அறிக்கையிடும் கடமையுடையதாகும். அது உள்ளகக் கணக்காய்விற்கு பொறுப்பாக இயங்குவதுடன் முகாமையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல் என்பவை வலுப் பெற உதவி வருகின்றது. இவ் உள்ளகக் கணக்காய்வு அலகினால் ரூபா 75,000 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளுக்கான

கொடுப்பனவுகளுக்கான 217 கோவைகள் பரிசீலிக்கப்பட்ட அதேவேளை 23 கணக்காய்வு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன.

வெளியக மூல வள முகாமைத்துவ அலகு உத்தியோகத்தர்களின் நீண்டகால, குறுங்கால பாடநெறிகளுக்கான நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்குரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்களுடன் இணைந்து நிறுவகத்திற்கு அதிகபட்ச நன்மைகளை அளிக்கும் ஏற்பாடுகளைச்செய்யப் பொறுப்பானதாகும்.மேலதிகமாக, இவ்வலகானது அனைத்து வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களையும் பட்டதாரிகளுக்கு ஆய்வு செய்ய நிதியளிப்பையும் ஒருங்கிணைக்கிறது. கடந்த ஐந்துவருடத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு அநேக வாய்ப்புகள் வழங்கப்பட்டு அவர்களின் தொழில்சார் தேர்ச்சிகள் நீண்டகால மற்றும் குறுகியகால நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுவதற்கு ஊக்கமளிக்கும் மானியங்கள் வழங்கப்பட்டன.

பின்வருபவை 2019 இற்கான அடைவுகளாகும்.

- பாடசாலை மட்ட கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டத்திற்காக மலேசியா மலாயா பல்கலைக்கழகத்திற்கு 12 அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்.
- நான்கு அதிகாரிகள் கலாநிதி பட்டமளிப்பு விழாவிற்கும், ஒரு அதிகாரி வாய் மொழி அமர்வுக்கும் மலேசியாMSU பல்கலைக்கழகத்திற்குச் சென்றனர்.
- கருத்தரங்குகள் / மாநாடுகள் மற்றும் குறுகிய கால பயிற்சி திட்டங்களுக்கு 05 அதிகாரிகளை வெளியக மூல வள முகாமைத்துவ அலகு அனுப்பியிருந்தது.

2.4 பீடங்களும் பிரிவுகளும்

2019 இல் நிறுவகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பில் வெவ்வேறு துறைகளும் அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள முறை கீழே தரப்படுகின்றது.

2.4.1 மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

- முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் துறை
- சிங்கள மொழித் துறை
- தமிழ் மொழித் துறை
- ஆங்கில மொழித் துறை
- அழகியற் கல்வித் துறை
- சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை
- சமூக விஞ்ஞானங்கள் துறை

2.4.2 விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பப் பீடம்

- விஞ்ஞானத் துறை
- கணிதத் துறை
- தொழில் நுட்பத் துறை
- வணிகத் துறை
- தகவல் தொழினுட்பத் துறை
- சுகாதார மற்றும் உடற்கல்வி அலகு
- அச்சிடல் வெளியீடுகள் துறை

2.4.3 ஆய்வு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பீடம்

- திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுத் துறை
- ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை
- பாடசாலை மட்ட கணிப்பீட்டு அலகு

2.4.4 கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம்

- வாண்மை அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை
- கல்வி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தித் துறை
- வெளிநாட்டுப் பாடநெறிகள் அலகு

2.4.5 ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக்கல்விப் பீடம்

- ஆசிரியர் கல்வித் துறை
- நிறுவக அபிவிருத்தித் துறை
- உள்ளடக்கக் கல்வித் துறை
- பாரம்பரிய மொழிகள் /வெளிநாட்டு மொழிகள் மற்றும் இரு மொழிக் கல்வித் துறை
- இலத்திரனியற் பரவல் துறை
- ஆலோசனை பகர்தல் அலகு
- திறந்த பாடசாலைகள் அலகு

2.4.6 நிர்வாகம், நிதி மற்றும் துணைநிலைச் சேவைகள் பிரிவு

- நிர்வாக மற்றும் மனித வளத் துறை
- நிதித் துறை.
- பொறியியல் சேவைகள் துறை மற்றும் பராமரிப்பு சேவைகள்
- நூலக மற்றும் அரும்பொருளகத் துறை
- போக்குவரத்து அலகு

2019 ஆம் ஆண்டின் விசேட நிகழ்ச்சிகள் / தேசிய கல்வி நிறுவகத்தின் அடைவுகள்

கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை அபிவிருத்தி மற்றும் கல்வி ஆய்வு சார்பான வருடாந்த நிறைவேற்றுகைத்திட்டம்(AIP)- 2019 உள்ளடக்கிய நிகழ்ச்சிகளின் நிறைவேற்றுகைக்கு மேலதிகமாக (AIP)- 2019இன் செயற்பாடுகளுக்குச் சார்பான பல்வேறு செயற்பாடுகள் தேசிய கல்வி நிறுவகத்தினால் 2019 இல் நிறைவேற்றப்பட்டன.

- தேசிய கற்பித்தல் டிப்ளோமாவைபூர்த்தி செய்த 6,967 டிப்ளோமாதாரிகளுக்கானபட்டமளிப்பு விழாவை தேசிய கல்வி நிறுவகமும் தேசிய கல்வியியல் கல்லூரிகளும் 6 வெவ்வேறு இடங்களில் நடத்தியது.

- தேசிய கல்வி நிறுவக வளாகத்தில் ஐந்து மாடி பல்நோக்கு கட்டிடம் விரிவுரை மண்டபங்கள், தொழில்நுட்பம் / விஞ்ஞானம்/ கணிதத்திற்கான ஆய்வகங்கள் மற்றும் கேட்போர் கூடம் என்பன உள்ளடங்கலாக நிர்மாணிக்கப்பட்டது.

- 13 வருட உத்தரவாதக் கல்வி குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 02 கண்காட்சிகள் நடத்தப்பட்டன. ஐந்து மாடி பல்நோக்கு கட்டிடத்தின் திறப்பு விழா மற்றும் கலாநிதி. சி. டபிள்யு . டபிள்யு. கன்னங்கர நினைவு சொற்பொழிவின் ஓரங்கமாக இவைகள் இடம்பெற்றதுடன்தே.க.நியூ டியூப் அலைவரிசையும் தொடங்கப்பட்டது.

- 65 அறைகளுடன் கூடிய ஊழியர்களின் விடுதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 15.99 மில்லியன்கள் ஆகும், இத்தொகை தே.க.நி உருவாக்கிய நிதிகளால் செலவிடப்படும்.
- பொது நலவாய கற்றல் அமையத்தின் ஒத்துழைப்புடன் "திறந்த பாடசாலை பாலின வழிகாட்டுதல்களை உருவாக்குதல்" குறித்து ஆய்வு / மாநாடு நடாத்தப்பட்டது.

3.0 கலைத்திட்ட அபிவிருத்தி

மொழிகள் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமும் விஞ்ஞான தொழினுட்பப் பீடமும் நாட்டின் பொதுக் கல்வி தொடர்பான சகல கலைத்திட்ட அபிவிருத்தி விடயங்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றது.

தேசிய கல்வி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கலைத்திட்ட அபிவிருத்திப் பணிகள், நாட்டின் பொதுவாகக் கல்விக் கலைத்திட்டம் சார்ந்த விடயங்கள் யாவற்றிற்கும் மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்துடன் விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம் என்பன பொறுப்பு வாய்ந்ததாக செயற்பட்டு 70 கலைத்திட்டங்கள் சார்ந்த நடவடிக்கைகளை 7 துறைகளைக் கொண்ட மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தினதும்,7 துறைகளைக் கொண்ட விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம் மற்றும் மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விப் பீடத்தின் பாரம்பரிய மொழிகள் மற்றும் இரு மொழித் துறையின் ஒத்துழைப்புடனும் 2019 இல்கலைத்திட்ட விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன். கலைத்திட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக பின்வரும் நோக்கங்கள் அடையப்பெறுமென எதிர்பார்க்கப்பட்டது.
அத்துடன் இது சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துப்பயிற்சிகளும் அவைகளை இலக்குவைத்தே செயற்படுத்தப்பட்டன.

கலைத்திட்ட அபிவிருத்திப் பீடங்களினது பிரதான நோக்கங்கள்:

- சமூக, கலாசார, பொருளாதார மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்குப் பொருந்தக் கூடிய பாடத்திட்டத்தைத் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்தல்.
- பாடத்திட்டத்தைப் புதிய முறையில் அமைப்பதற்கான, கருத்துள்ள செயல்முறைக் கற்றல்-கற்பித்தல் செய்முறைக்கான புதிய நுணுக்கங்களைப் பாடசாலைகளுக்கு அறிமுகஞ் செய்தல்.
- பாடத்திட்டத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் அமுலாக்குதல் என்பவற்றில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில்சார் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் சம்பந்தமான தகவல்களை வெளிப் படுத்தும்முகமான கல்வியின் தரம் பற்றிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும் கற்கைநெறிகளை அமுலாக்கல்.
- கற்றல்-கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் வெற்றிக்காக புதிய முறை யியல்களை அறிமுகம் செய்தல்.
- தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தேசிய, சர்வதேச மொழிகளில் மாணவர்களின் தேர்ச்சியை விருத்தி செய்தல்.
- சுகாதாரம் மற்றும் இயற்கை மரபுரிமை என்பவற்றைப் பாதுகாத்துப் பேணி மாணவர் களுக்கான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- சமூகத்தில் உள்ள பல்வேறு இனக் குழுமங்களின் மொழி வேறுபாடுகள், சமய, கலா சாரப் பெறுமதிகள் பற்றி மாணவர்களின் தேர்ச்சியை விருத்தி செய்து இலங்கையர்கள் என்ற ஒரே எண்ணப்பாட்டுடன் வாழுதல்.

கீழ்வரும் கலைத்திட்ட விருத்தி,திட்ட அமுல்படுத்துகை, எல்லா தரங்களுக்கும் 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டதுடன் அடுத்த கட்ட 5 ஆந் தரத்திற்காக 2020 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இப்பணியினை தேசிய கல்வி நிறுவகம் மேற்கொள்ளும் ஒழுங்கு முறை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 – 2020 கலைத்திட்ட அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்தப்படும் முறை

இலக்கு	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
பாடத்திட்ட சட்டக தயாரிப்பு	தரம் 1-5, 6-11								
பாடத்திட்ட தயாரிப்பு	தரங்கள் 6, 10	தரங்கள் 1, 7, 11	தரங்கள் 2, 8	தரங்கள் 3, 9,5 மற்றும் 13	தரம் 4	தரம் 5			
ஆசிரியர் கைந்நூல்கள் தயாரிப்பு		தரங்கள் 6, 10	தரங்கள் 1, 7, 11	தரங்கள் 2, 8, 12	தரங்கள் 3, 9, 13	தரம் 4	தரம் 5		
அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள்			தரங்கள் 6, 10	தரங்கள் 1, 7, 11	தரங்கள் 2, 8, 12	தரங்கள் 3, 9, 13	தரம் 4	தரம் 5	
அமுல்படுத்தப் படவுள்ள பாடத்திட்டங்கள்				தரங்கள் 6, 10	தரங்கள் 1, 7, 11	தரங்கள் 2, 8, 12	தரங்கள் 3, 9, 13	தரம் 4	தரம் 5

கலைத்திட்டவிருத்தி தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள் கீழே தரப்படுகின்றன.

3.1 ஆரம்ப கல்வி

- ஆசிரியர் வழிகாட்டிகளின் (TGs) 14இன் இறுதி வரைவுகளைத் தயாரித்து கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

- பிரதான கட்டம் (KS) 3இற்கான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளின் (ELC) கண்டறியும்கருவிகள் தயாரித்து பரீசிலிக்கப்பட்டன.

•பிரதான கட்டம் (KS) 3இற்கான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளின் (ELC) சிங்கள மற்றும் தமிழ் மூலமானவைகள் பூர்த்தி செய்யப்பட்டு 650 வள நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

•தரம் 4 இற்கான பின்னூட்டல் பொறி முறைகள் தயாரிக்கப்பட்டன.

•ஆரம்ப கல்விமாகாண அணிகளை வலுப்படுத்துவதற்காக இரண்டாம் தேசிய மொழி கற்பித்தலுக்காக (2NL) சிங்கள மற்றும் தமிழில் அச்சிடப்பட்ட பயிற்சி வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டன.

• சமூக ஒத்திசைவு எண்ணக்கருக்களை வலுப்படுத்த துணைச்சாதனங்களின் இறுதி வரைவு செய்யப்பட்டன.

•குழந்தைகளை மையமாகக் கொண்ட பாடத்திட்டத்திற்கான தேசிய கட்டமைப்பு நிறைவு செய்யப்பட்டது.

•செயல்பாட்டு வாய்வழி ஆங்கிலத்தை வலுப்படுத்தத்துணைச்சாதனங்களின இறுதி வரைவு நிறைவு செய்யப்பட்டது.(ABOE).

•மாகாண வளவாளர்கள் 650 பேர்களுக்கு தரம் 5 ஆசிரியர் வழிகாட்டிகளின் (TGs) தொடர்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.

•செயல்பாட்டு வாய்வழி ஆங்கிலத்தை(ABOE) வலுப்படுத்த 650 வளவாளர்களுக்குபயிற்சி அளிக்கப்பட்டது.

3.2 இடைநிலைக் கல்வி:

- தரங்கள் 6-11இற்கான கலைத்திட்ட சட்டகங்களின் 50 வரைவுகள் தயார் செய்யப்பட்டன.
- தரம் 13இற்கான ஊடகக்கற்கைக்கானஆசிரியர் வழிகாட்டி (TG) ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வருகின்றது.
- தரம் 13இற்கான ஆசிரியர் வழிகாட்டியின்(கொரியமொழி) முதல் வரைவு தயாரிக்கப்பட்டது.
- தரம் 5இற்கான ஆங்கில ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டது.
- வள நூல்கள் 19இன் இறுதி வரைவுகள் தயாரிக்கப்பட்டன.
  (தரம் 13இற்கான உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல்,பௌத்தம் மற்றும் பௌத்த நாகரிகம், இந்துசமயம், இந்துநாகரிகம், கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய நாகரிகம் தரங்கள் 12/13இற்கானவிவசாய விஞ்ஞானம்,பொறியியல் தொழில்நுட்பம்,தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் தரங்கள் 10-11இற்கானஹிந்தி மற்றும் ஜப்பானிய மொழி)

- செயல்நூல்கள் இரண்டு தயாரிக்கப்பட்டன.(தரங்கள் 7 மற்றும் 8)
- தரம் ஆறுமுதல் மொழிக்கான வாசிப்பு நூல்கள் இரண்டு தயாரிக்கப்பட்டன.(சி/த)
- ஒரு இறுவட்டு மற்றும் 5DVDகளின் கதைச் சுருக்கம் பூர்த்தியாக்கப்பட்டன. (கீழைத்தேய சங்கீதம், பிரிவேனாக் கல்வி, உயிர்முறைத் தொழில்நுட்பம் மற்றும் ஊடகக் கற்கைகள்)
- மனைப்பொருளியல் செய்முறை வழிகாட்டியின் இறுதி வரைவு பூர்த்தியாக்கப்பட்டது. (தரம் 13)
- உயர்தர வரலாற்று தேசப்படப்புத்தகத்தின் தமிழுக்கான மொழிப்பெயர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டது.
- தொழில்நுட்ப பகுதியினை விருத்தி செய்வதான தே.க.நி வெப்தளத்தோடு கற்றல் முகாமைத்துவ முறைமை இணைக்கப்படுவதான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு அதில் ஆசிரியர்களின் தகவல்கள் இணைக்கப்படுவதான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.
- தரம் 06இற்கான கணித எண்ணக்கரு வரைவினை செயற்ப்படுத்தல் தொடர்பிலான 20 செற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டும் தரம் 03இற்கான 10 செயற்பாடுகளுக்கானவரைவும் பரிசீலிக்கப்பட்டுபூர்த்தியாக்கப்பட்டன.
- உயிர் தொழில்முறை தொழில்நுட்பத்திற்கான ஆய்வுகூட வழிகாட்டியின் இறுதி வரைவு பூர்த்தி செய்யப்பட்டது. (தரங்கள் 12 /13)
- உயிரியல் மற்றும் வணிகத்திற்கான கலைச்சொற்களின் இறுதி வரைவு பூர்த்திசெய்யப்பட்டன.
- தரங்கள் 6 – 13இற்கான 20 கல்வி மென்பொருள்கள் பூர்த்திசெய்யப்பட்டன.
- 100 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான(ICT)மாதிரி வினாக்கள் பூர்த்திசெய்யப்பட்டன.(தரங்கள்12 /13)
- தரங்கள் 6–11 வரையான 682 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கும் 2136 உயர்தர ஆசிரியர்களுக்குமான பயிற்சிகள் பூர்த்திசெய்யப்பட்டன.

3.3**இருமொழிக் கல்வி**

- இருமொழிக் கல்விக்கான கையேட்டின் இரண்டாம் வரைவு தயாரிக்கப்பட்டது.
- ஆசிரியர் அபிவிருத்திக்கான சாதனங்களின் தயாரிப்பு நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன்அதற்கான அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள் பாடசாலைக் கொத்தணியை அடிப்படையாகக் கொண்ட கல்வி விருத்தி செயற்றிட்டமாக நடாத்தப்பட்டது.(SCBEDP)
- 20 சிற்றேடுகளினதும் 20 சுவரொட்டிகளினதும் முதலாம் வரைவு தயாரிக்கப்பட்டது.

3.4 பாடசாலை மட்டக் கணிப்பீடு

- பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான வழிகாட்டல் கையேடு வரைவு செய்யப்பட்டதுடன்கல்வி அமைச்சிற்கும் பரீட்சைத் திணைக்களத்திற்கும் ஆலோசனைகளுக்காகவும் கருத்துரைகளுக்காகவும் அவைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- பிரிவெனா துறைகளுக்காக பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.(23 பங்குபற்றுனர்கள்)
- மாகாண மட்ட பயிற்றுனர் நிகழ்ச்சிகளுக்காக 3 காணொளி தொகுப்புகள் தயாரிக்கப்பட்டன.

3.5 13 வருடங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம்

தரம் 1 – 13 வரையில் பல்வேறு அபிவிருத்தி தந்ரோபாயங்களினூடாக முழு கலைத்திட்ட அபிவிருத்தி செய்முறை கைகொள்ளப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் குறித்த அளவிலான மாணவர்கள் வெற்றிகரமான பிரஜையாக வாழ்வதற்கான பொருத்தமான அறிவினையும் தேர்ச்சிகளை அல்லது திறன்களை பெற்றுக்கொள்ளாது இடைவிலகிச் செல்கின்றனர். அதற்கான காரணமாக அமைவது உயர் கட்டமைப்பான கலைத்திட்டம் , கற்றல் கற்பித்தல் செய்முறை மற்றும் பரீட்சை முறையாகும்.அத்துடன் முறைமையிலுள்ள இடைவெளிகள் இனங்காணப்பட்டு இவ் இடைவெளிகளை கருத்திற் கொண்டும் தற்போதைய கல்வியின் செல்நெறிகள் மற்றும் பூகோள உள்நாட்டு புதிய கல்வி கொள்கைகள் அரசாங்கத்தினால் விருத்தி செய்யப்பட்டு 13வருடங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒரு பரிகாரமாக கொள்ளப்பட்டு கற்றல் வாய்ப்புகளையும் இலவசக் கல்வியினையும் நாட்டில் உறுதிப்படுத்த இத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. கீழ்வரும் செயற்பாடுகள் மேற்குறித்த செயற்றிட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டன.

- பொதுப்பாடக் கூறிற்காக 1000 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.(கட்டம் 03)
- 26 இடைநிலை மொடியுல்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அவற்றை அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.
- 2774 ஆசிரியர்கள் அறிமுக மற்றும் இடைநிலை மொடியுல்களுக்கான 26 தொழில்சார் பாடங்களுக்காக பயிற்றுவிக்கப்பட்டனர்.
- 15 பாடசாலை நிகழ்ச்சிகளுக்காக அதிகாரிகள்பங்குப்பற்றியிருந்தனர். (கட்டம் 01)
- 158அதிபர்கள் மற்றும் பாடசாலை இணைப்பாளர்களுக்கான 02 அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள் (சி/த) நடாத்தப்பட்டன (கட்டம் 03)

- உயர்தர மொடியுல்களுக்காக 75 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். (வளைதளம் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி)
- குறித்த பாடத்திற்கான, பாடத்திட்ட உள்ளடக்கம்,மொடியுல் விருத்தி என்பவற்றிற்கான கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி என்பவற்றோடு 13 வருட நிகழ்ச்சித் திட்டத்திற்கான பயிற்சிகள், தொழில்சார் பயிற்சிகள் என்பன பாட வளவாளர்கள் மற்றும் தே.க.நி உரிய அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்வி அமைச்சின் உபக்குழு அங்கத்தவர்களுக்காக நடத்தப்பட்டன.

4.0 கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் வாண்மை விருத்தி கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களின் முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ திறமை களை ஊக்குவிப்பதே மீப்பேயில் அமைக்கப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவக தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் பிரதான பணியாகும். இது கல்வித் துறையில் ஈடுபடுவோரின் தொழில்சார் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சியினை விருத்தி செய்தல் எனும் நோக்கத்தில் இயங்கி வருகின்றது.மேற்குறித்த இலக்கினை அடைவதற்கு, பீடத்தினால் கல்வி முகாமைத்துவம் மற்றும் பாடசாலை நிர்வாகம் சார்ந்த விடயங்களை டிப்ளோமா மட்டத்திலிருந்து முதுமாணி பட்டப் படிப்பு மட்டம் வரை கொண்டு செல்ல பல்வேறு பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் அட்டவணையானது கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தினால் 2019 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றம் பற்றிய தகவல்களைக்காட்டுகிறது.

பாடநெறி	பொறுப்புவாய்ந்த துறை	பாடநெறி நடைபெறும் இடம்	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை
பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் (கல்வி முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டப்பின்படிப்பு பாடநெறிMSc)	வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்	மீப்பே நிலையம்	34
பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகள் கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (முழுநேரம்/பகுதிநேரம்)	வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்	மீப்பே நிலையம்	280

டிப்ளோமா பாடநெறிகள் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா	வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் ஆங்கிலம்	மீப்பே நிலையம்	267
வெளிநாட்டு மாணவர்களுக்கான பாடநெறிகள் கல்வித்தலைமைத்துவம்பற்றிய விஞ்ஞானமாணி பட்டப்பின் படிப்பு பாடநெறி	வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம்	மீப்பே நிலையம்	15

5.0 ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது, புதிது காணும் ஆசிரியர்கல்வி முறைகளினைப் பயன்படுத்தி, பாரிய அளவிலும், வெவ்வேறான மட்டங்களிலுமுள்ள ஆசிரியர் குழுக்களின் தொழில்சார் அபிவிருத்தித் தேவைகளுக்கு உசாத்துணையினை வழங்கும் ஒரு நீண்ட மற்றும் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது. எந்த ஒரு பாடத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதும் அல்லது இவைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வேறு அபிவிருத்தி முன்னோடியும் ஆசிரியர் சம்பந்தப்பட்ட காரணிகளில் தங்கியுள்ளது. திறன்மிக்க செயற்பாட்டாளர்களாக வருவதற்கு தேவையாக அறிந்து கொள்ளும் தன்மையும், ஆசிரியர்களுக்கான நம்பிக்கை, தேர்ச்சி என்பனவற்றை வழங்கும் நோக்கமும் தரும் உயர் தரமான பட்டப்படிப்புப் பாடநெறிகள் வழங்குவதும் தேவையாக உள்ளது. இந்த நோக்கத்திற்காக, தரம்மிக்க ஆசிரியர் கல்வித் துறைகள் மற்றும் சில பாடத்திட்ட அபிவிருத்தி துறைகளும், தராதரப் பத்திர மட்டத்திலிருந்து தத்துவ முதுமாணி மட்டம் வரையான பல்வேறு ஆசிரியர் கல்விப் பாடநெறிகளை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நோக்கங்களுக்காக தேசிய கல்வி நிறுவகம் நாடெங்கும் பரந்து காணப்படும் அதன் பிராந்திய நிலையங்களோடும் நெருங்கிய கூட்டுறவினைக் கொண்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தினால் அமுலாக்கப்பட்ட எல்லாவிதமான பட்டப்பின்படிப்பு, பட்டப் படிப்பு, பட்டமல்லாத கற்கைநெறிகள் யாவும் கல்விசார் ஆளணிக்குத் தேவையானதாகக் கருதும் தொழில்சார் அபிவிருத்தியை பிரதான குறிக்கோள்களாகக் கொண்டுள்ளன. அத்துடன் அதற்குரிய பொருத்தமான குழுவுக்குப் பின்வரும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளைத் தர எதிர்பார்க்கிறது.

பின்வரும் அட்டவணையானது,தேசிய கல்வி நிறுவகத்தின் மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினதும் அத்துடன் ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக்கல்விப் பீடத்தினதும்

பல்வேறு துறைகளினால் 2019 இல் அமுலாக்கப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

பாடநெறி	மொழியாக்க துறை	பாடநெறி நடைபெறும் இடம்	மாணவர்களின் எண்ணிக்கை
பட்டப்பின்படிப்புப் பாடநெறிகள்			
கல்வி தத்துவமாணி	ஆசிரியர் கல்வி	தே.க.நி	26
கல்வி முதுமாணி	ஆசிரியர் கல்வி	தே.க.நி /யாழ்ப்பாணம் நிலையம்	304
பட்டப்பின் டிப்ளோமா பாடநெறி			
பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி	ஆசிரியர் கல்வி	தே.க.நி +42 பிராந்திய நிலையங்கள்	3765
பட்டப்படிப்புப் பாடநெறிகள்			
கல்வி இளமாணி (கௌரவ)	ஆசிரியர் கல்வி	தே.க.நி +பிராந்திய நிலையம் 1	1045
கல்வி இளமாணி(பொது)	ஆசிரியர் கல்வி	தே.க.நி+37 பிராந்திய நிலையங்கள	3860
கல்வி இளமாணி (பொறியியல், தொழினுட்பம்)	ஆசிரியர் கல்வி	தே.க.நி+04 பிராந்திய நிலையங்கள்	397
டிப்ளோமா பாடநெறிகள்			
இரண்டாம் மொழியாகஆங்கிலத்தை கற்பித்தலில்டிப்ளோமா	ஆங்கிலம்	தே.க.நி	14
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வியில் டிப்ளோமா	ஆரம்பக்கல்வி	தே.க.நி	49
விசேட கல்வியில் டிப்ளோமா	உள்ளடக்கக் கல்வி	தே.க.நி	58
சைகை மொழியில் டிப்ளோமா	உள்ளடக்கக் கல்வி	தே.க.நி	24

வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலில் டிப்ளோமா மேலதிக மொழி விருத்தி டிப்ளோமா பாடநெறி	வழிகாட்டல்-ஆலோசனை பகர்தல்அலகு ஆசிரியர் கல்வி	தே.க.நி தே.க.நிநிலையங்கள் 10	122 278
சான்றிதழ் பாடநெறி			
பிறெயில் பாடநெறி கணிதபாடம் கற்பிப்பதற்கான	உள்ளடக்கக் கல்வி	தே.க.நி	20
சான்றிதழ் பாடநெறி	கணிதம்	தே.க.நி	93
கல்வி ஆய்வு முறையியலுக்கான குறுங்கால பாடநெறிகள்	ஆய்வு அபிவிருத்தித் துறை	தே.க.நி	50

5.1நிறுவக அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது சேவைக்கு முன்னதான ஆசிரியர்களுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும், சேவையிலுள்ள ஆசிரியர்களினது ஆசிரியர் கலாசாலை களினதும் கலைத் திட்டத்திற்குப் பொறுப்பாக விளங்குகின்றது. அத்துடன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளின் ஊடாக சேவைக்கால ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துவதற்கும் பொறுப்பாக உள்ளது.2019 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப் பகுதியினுள் கீழ்வரும் செயற்பாடுகள் இடம்பெற்றன.

- செயல்நிலை ஆய்வு தொடர்பில் பகிரங்கப்படுத்தல் கருத்தரங்கை நடத்தி 40 ஆய்வுக்கட்டுரைகள் மதிப்பீடு செய்யப்பட்டது.
- ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் 02 உள்வாரிப்பரீட்சைகளுக்காக 30 வினாப்பத்திரங்கள் தயார் செய்யப்பட்டன.
- தேசியக் கல்வியியற் கல்லூரிகளின் தலைவர்கள் மற்றும் உப தலைவர்களுக்கும் ஆசிரியர் கலாசாலை அதிபர்களுக்கும் 04 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.
- தேசியக் கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலை என்பவற்றிற்கு ஆசிரியர் கல்வி பாடநெறிகளை மேற்பார்வை செய்வதற்காக 05 விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- தேசியக்கல்வியியற் கல்லூரிகளின் கல்வி இளமாணி பட்டப்படிப்புக்கான விதிமுறைகள் விருத்திசெய்ப்பட்டது.
- 04வருட கல்விசார் நிகழ்ச்சி நிரல் விருத்தி செய்ப்பட்டதுடன் மதிப்பீட்டு நடைமுறைகளுக்கான வரைவும் தயாரிக்கப்பட்டன.

- கல்வி இளமாணி பட்டப்படிப்புக்கான விரிவான முதல் வரைவு தயாரிக்கப்பட்டது.
- 608 பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு அடிப்படை தகைமையை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைவதற்கு வழங்க பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

6.0 மாற்றுக் கல்வி

மேற்குறிப்பிட்ட பணிகளை அமுல்நடத்துவதுடன் ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்விப் பீடம் பல்வேறுபட்ட காரணங்களினால் முறைசார்ந்த கல்வியை தவறவிட்டவர்களுக்கு பரந்தளவில் கல்வி வாய்ப்புகளை வழங்குவதை நோக்காகக் கொண்டிருக்கிறது. இது தொடர்பில் "அனைவருக்கும் கல்வி" மற்றும்"வாழ்க்கை நீடித்த கல்வி" என்ற எண்ணக்கருக்களை கருத்திற் கொண்டு கிடைக்கக்கூடியதான நவீன தொழில் நுட்பம் மற்றும் ஏனைய துணைச் சேவைகளையும் உச்ச அளவில் பயன்படுத்தியும் விரிவுபடுத்தியும் இம்முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேற்குறித்ததைப் பின்பற்றியதாய் துறைகளாலும் அலகுகளாலும் 2019 இல் பின்வரும் செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டன.

6.1உட்படுத்தற் கல்வித்துறை

அனைவருக்கும் கல்வி வழங்கும் எண்ணக்கருவினை உண்மையாக்குவதை உட்படுத்தற் கல்வித் துறையானது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. விசேட தேவையுள்ள பிள்ளைகளின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யக்கூடியவாறு தற்போதுள்ள கலைத்திட்டத்திற்கு ஏற்றவாறு துறைசார்ந்த ஆசிரியர்களையும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை பயிற்றுவிக்கும் பணிகளோடு உசாத்துணை நூல்களை தயாரித்தல் மற்றும் உட்படுத்தற் கல்வி தொடர்பானதும்,சைகை மொழி தொடர்பான பாடநெறிகளை நடத்தலும் இத்துறையின் பிரதான பணிகளாகும். குறிப்பிட்ட காலப்பகுதியில் கீழ்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஆசிரியர் வழிகாட்டி தொடர்பில் 30 பாடங்கள் மொழியிணைப்பு செய்யப்பட்டது. (மொழிகள், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்) – தரம் 04
- கொரிய உள்ளடக்க கல்வியின் பாடத்திட்டத்தின் முதலாம் இரண்டாம் நூல்கள் சிங்களமொழிக்குமொழிமாற்றம்செய்யப்பட்டது.
- விசேட தேவையுள்ள பிள்ளைகளின் விளையாட்டு மற்றும் போட்டிகள் தொடர்பில் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன.
- உள்ளடக்க கல்விக்கான சஞ்சிகைத் தயாரிக்கப்பட்டது.
- சைகை மொழிக்கான வழிகாட்டல் DVD தயாரிக்கப்பட்டது.
- விசேடக் கல்வித் தேவையுள்ள 38 பிள்ளைகள் மதிப்பிடப்பட்டும் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டன.

6.2 இலத்திரனியல் பரவற் துறை

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை சமூகத்தை மட்டுமன்றி, வெளியிலுள்ள சமூகத்தையும் இலத்திரனியல் கற்றல் உபரணங்களாகிய தொலைக்காட்சி, வானொலி மற்றும் கவர்ச்சியான, வினைத்திறன்மிக்க கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தி வரவேற்றழைக்கும் சமிக்ஞையை வழங்குகிறது. இத்தகைய உபகரணங்கள் சம்பிரதாயம் அல்லாத கல்விப் புலங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அழகியல் முறைகளான பாடல்கள், சங்கீதம் மற்றும் நாடகம் என்பவற்றின் ஊடாக பாடத்திட்டத்தின் உயர்தர நிலையிலுள்ள கருத்துருக்களை விளக்கவும், காலத்திற்குக்காலம் மாற்றமடைகின்ற, பாடத்திட்ட விடயங்களின் மீது பாடசாலைச் சமூகம் விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும் என்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளன.

2019 இல் பின்வரும் செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டன.

- ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விக்கான கலைத்திட்டத்தின் (சி/த) கற்றல் கற்பித்தல் அடைவின் செயன்முறையை அதிகரித்துக் கொள்வதற்காக 40 காணொளி துணைச் சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.
- கற்றல்கற்பித்தல்செயன்முறையை அதிகரித்துக் கொள்வதற்காக 23 காணொளி துணைச் சாதனங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- கல்வி முதுமாணி பட்டப்படிப்பிற்கான 15 காணொளி நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன.
- 13 வருடங்கள் - உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை மேம்படுத்திக் கொள்வதற்காக 10 காணொளி நிகழ்ச்சிகள்தயாரிக்கப்பட்டன.
- 72 பதிவேற்றம் செய்யப்பட்டதுடன் 20 காணொளி உள்ளடக்கங்கள் தே.க.நிYOU TUBEஅலைவரிசைக்காக விருத்தி செய்யப்பட்டன.

6.3 வழிகாட்டல் மற்றும் ஆலோசனை பகர்தல்

கல்விச் சமூகத்தினது உளவியற் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அது தொடர்பில் அர்ப்பணிப்புடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக 2006 ஜூன் மாதத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவையின் அங்கீகாரத்ததுடன் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை பகர்தல் அலகு நிறுவப்பட்டது. பாடசாலை மாணவர் குழுமத்திற்கு தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்குரிய பொறுப்பை இந்த அலகு ஏற்றுக்கொண்டுள்ளது. பின்வரும் செயற்பாடுகள் 2019 இல் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

- பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் 18 பேருக்காக உள்வாரி ஆலோசனை அமர்வுகள் நடாத்தப்பட்டன.

- 224 பாடசாலை ஆலோசகர்களும் தொழில் வழிகாட்டி ஆலோசகர்களும் அறிவூட்டம் செய்யப்பட்டனர்.
- தொழில் வழிகாட்டலுக்கான ஆசிரிய வழிகாட்டியின் வரைவு தயாரிக்கப்பட்டது.

6.4 திறந்த கற்றல்

திறந்த பாடசாலைகள் அலகு முறைக்கல்வியை பல்வேறுபட்ட காரணங்களினால் தவற விட்டவர்களின் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு தொலைக்கல்விப் பாடநெறிகளினூடாக அதனை மீளவும் வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது.இக்கற்பித்தலானது, கல்வியை பயில்வு நாடிகளிடையே கொண்டு செல்வதற்காக, தொலை தூர மற்றும் திறந்த கல்வி அணுகுமுறைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. பயில்வு நாடிகளின் கல்வித் தகைமைகளைக் கருதாது தொழில் அல்லது சமூகத் தேவைகளுக்கிணங்க தமக்குப் பொருத்தமான கற்றல், கற்றல் முறை, எந்நிலையிலிருந்தும் கற்றலை ஆரம்பித்தல் என்பவற்றை தமக்கேற்றாற் போல் தெரிவு செய்வதற்கான வசதியையும், வாய்ப்பையும் திறந்த பாடசாலைகள் அலகு வழங்கி வருகின்றது.

திறந்தமுறைக் கற்றல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தினால் பின்வரும் செயற்பாடுகள் 2019 இல் நிறைவு செய்யப்பட்டன.

- போதனாசிரியர்களுக்காக 02 உசாத்துணை நூல்கள்(கணிதம் மற்றும்விஞ்ஞானம்என்பற்றுக்காக) தயாரிக்கப்பட்டன.
- எழுத்தறிவு மற்றும் அடிப்படைக்கல்வி பாடநெறிக்காக போதனாசிரியர் வழிகாட்டல் உசாத்துணை நூலொன்று தயாரிக்கப்பட்டது.
- எழுத்தறிவு, அடிப்படைக்கல்வி மற்றும் திறந்த இரண்டாம்நிலை பாடநெறிகளுக்கு 85 போதனாசிரியர்கள் இற்றைப்படுத்தப்பட்டனர்.
- புதிய பிராந்திய நிலையங்களை நிறுவுவதற்கும், தற்போதுள்ளநிலையங்களைமறுசீரமைப்பதற்கும் தேவை பற்றிய ஆய்வு நடத்தப்பட்டது.
- வடமராட்சி மற்றும் மீசாலையில் 02 நிலையங்கள்மறுசீரமைக்கப்பட்டது.
- பயில்வு நடவடிக்கைகளுக்காக 25 நிலையங்களில் 42 கற்கை அமர்வுகள் நடத்தப்பட்டன.
- திறந்த அடிப்படைப்பாடநெறியில் 430 பேரும் திறந்த இரண்டாம்நிலை பாடநெறியை 1382 பேரும் பருதியளவில் பூர்த்தி செய்திருந்தனர்.
- அடிப்படைப்பாடநெறிக்கு 600 புதிய பயில்வு நாடிகளும் இரண்டாம்நிலை பாடநெறிக்கு 1600 பயில்வு நாடிகளும் 2019இல் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

7.0 ஆய்வு,திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, பல்வேறுபட்ட ஆய்வுத் திட்டங்களினூடாக கொள்கைகளை வகுத்தல் போன்றவற்றுக்கு பங்களித்து வருகின்றது. இந்தப் பணிகளானவை ஆய்வு அபிவிருத்தித் துறை மற்றும் திட்டமிடல் மதிப்பீட்டுத்துறை என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.1 ஆய்வு அபிவிருத்தி துறை

ஆய்வு அபிவிருத்தித் துறையானது கல்வி ஆய்வினை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல் முன்னெடுத்தல் கலந்துரையாடுவதற்கும் விபரிப்பதற்குமான கல்விப் பிரச்சினைகளுக்கான அடித்தளங்களை நிறுவுதல் மற்றும் கல்வி ஆய்வுக்கான திறன்களை விருத்தி செய்து கொள்ள முனையும் துறைசார்ந்தவர்களுக்கு பாடநெறிகளை நடாத்தல் உதவி , வழங்குதல் ஆய்வுத் தகவல்களை பகிரல் போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டில் கீழ்வரும் குறிப்பிடத்தக்க பணிகளை ஆய்வு அபிவிருத்தி துறையானது மேற்கொண்டிருந்தது.

- கலாநிதி. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர ஞாபகார்த்த விரிவுரைகளின் 2002 தொடக்கம் 2013 வரையான இறுதி தொகுப்பு அறிக்கை (சி/த/ஆ) தயாரிக்கப்பட்டது.

- ஆய்வு முடிவுகளை பிறநாட்டு சஞ்சிகைகள் மூலம் பரப்ப வெளிநாட்டு ஆய்வு சஞ்சிகை தயாரிக்கப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டிற்கான 04 ஆய்வு மானியங்கள் வழங்கப்பட்டன மற்றும் அத்தியாயங்களை மறுஆய்வு செய்வது தொடர்கிறது. கொள்கை ஆய்வுகளை மேற்கொள்வதற்குஆய்வாளர்களை ஊக்குவிக்க 03 ஆய்வுகளுக்கான மானியங்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- இலங்கையின் பாடசாலை முறைமையில் இணை பாடவிதான செயற்பாடுகள் செயல்படுத்துவதன் தன்மை குறித்து நடத்தப்பட்ட ஒரு ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.
- கலாநிதி. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர30 ஆவது ஞாபகார்த்த விரிவுரைஇலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கணிதத் துறையின்கலாநிதி உபாலி மாம்பிட்டியஅவர்களினால் "நாளைய உலகத்திற்கான இடைநிலைகலைத்திட்டத்தை மீள்வரையறை செய்தல்"என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது.
- செய்தி சஞ்சிகை (தொகுதி –I) பிரசுரிக்கப்பட்டு மாகாண மட்டத்திலும் வலயக்கல்வி அலுவலக மட்டத்திலும் தேசிய கல்விக்கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி மையங்களிலும் விநியோகிக்கப்பட்டது. 02 ஆவது செய்திச் சஞ்சிகை (தொகுதி –II) அச்சிடலுக்கு தயார் நிலையில் உள்ளது.

- இலங்கையில் உயர்தர மாணவர்கள் பாடத் துறையை தெரிவு செய்தலுக்கான ஆய்வு அறிக்கையின் வரைவு பூர்த்தியாக்கப்பட்டது.
- இடைநிலைக் கல்வியின்கலைத்திட்டத்தின் சுகாதாரம் மற்றும் உடற்கல்விபாட உள்ளடக்கத்தின் பகுப்பாய்வுஆய்வுஅறிக்கையின் வரைவு பூர்த்தியாக்கப்பட்டது.

7.2 திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதல் துறை

கிடைக்கக்கூடிய மனித பௌதிக வளங்களை வினைத்திறனாகவும் விளைத் திறனாகவும் பயன்படுத்தி தேசிய இலக்குகளுடன் இணைந்த வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் இலக்குகளையும் அடைந்து கொள்ளத்தக்க வகையில் 2019 ஆம் ஆண்டின் முடிவில் கீழ்வரும் பணிகளை, திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு துறை நிறைவேற்றி இருந்தது.

- 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- 2020–2024ஆம் ஆண்டிற்காக ஐந்தாண்டு தந்திரோபாயமுகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டது.(வரைவு)
- 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகள், வருடாந்த பாதீடு மற்றும் அமுலாக்கல் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டன.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்றிட்டங்களின் 2019காலாண்டிற்கான செயற்பாடுகளின் முன்னேற்ற அறிக்கைகள் 04 தயாரிக்கப்பட்டன.
- ஏனைய நிறுவனங்களுக்கு முன்வைக்கப்படுவதற்காக கீழ்வரும் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
  - மத்திய வங்கிக்கு முன்வைப்பதற்கான 02 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
  - அரச பொது திறைசேரிக்கு முன்வைப்பதற்கான முன்னேற்ற அறிக்கைகள் 04
  - தயாரிக்கப்பட்டன.
  - கல்வி அமைச்சு,மற்றும் யுனிசெப் முதலிய வெளிநாட்டு நிதி உதவி நிறுவனங் களுக்கு முன்வைப்பதற்கு காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- 13 வருடங்கள் உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கான இணைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

8.0 நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள்

நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள் பிரிவின் பணியானது நிதி, பௌதிக, முகாமைத்துவ சேவைகளையும், துணைச் சேவைகளையும் நிறுவகத்தின் ஐந்து கல்வி சார் பீடங்களுக்கும் ஏனைய துறைகளுக்கும் அலகுகளுக்கும் வழங்கி வருவதாகும்.

8.1 நிர்வாகத் துறை

நிர்வாக மற்றும் துணைச்சேவைகளின் பிரிவின் கீழ் இயங்கி வரும் நிர்வாகத் துறை, சகல நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குப் .பொறுப்பாக உள்ளது. அத்தோடு ஊழியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு அவசியமான பயிற்சிகளை உள்நாட்டில் வழங்குகின்றது. நிர்வாகத் துறை 2019 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் கீழ்வரும் பணிகளைப் பூர்த்தி செய் திருந்தது.

- **ஆட்சேர்ப்பு**

கொள்முதல் உத்தியோகத்தர்	- 01
உதவி விரிவுரையாளர்கள்	- 36
உதவிப் பணிப்பாளர் (நிதி)	- 01
கணக்கு பதியுநர்	- 01
முகாமைத்துவ உதவியாளர்கள்	- 38
சாரதிகள்	- 05
அலுவலக உதவியாளர்கள்	- 08
தொழிலாளர்கள்	- 03

- **பதவியுயர்வுகள்**

பணிப்பாளர்கள்	- 06
சிரேஷ்ட்ட விரிவுரையாளர்கள்	- 15

இதைத்தவிர நிறுவனத்தின் கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் 35 பேருக்கு பாடநெறிகளைத் தொடர்வது தொடர்பிலான வேண்டுகோள்களுக்கமைய நிதி ஒதுக்கீடுகளும் கற்றல் விடுமுறைகளும் வழங்கப்பட்டன.

8.2 நிதித்துறை

நிதித்துறையானது நிறுவகத்தின் அனைத்து தேவைகளுக்குமான நிதி வளங்களை வழங்குதல் வருமானச் செலவின அறிக்கைகளை நிதிப் பிரமாணங்களுக்கமைய பேணி அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்கின்றது.இக்குறித்த காலப்பகுதியில் இதன் பணிகளாவன:

- நிலையான சொத்துக்களின் பதிவின் 80%தயாரித்து முடிக்கப்பட்டிருந்தன.
- 2018 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.
- 2018 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளை தயாரித்து கணகாய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

8.3 பொறியியற் சேவைகள் துறையும் பேணுகையும்

பொறியியற் சேவைகள்துறையானது கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான பௌதிகச் சூழலைப் பேணுவதையும் நிறுவகத்தின் கட்டட நிர்மாணப் பேணுகைப் பணிகள், மின்சார தொலைபேசிச் சேவைகள்,உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒதுக்கீடுகள், துப்பரவாக்கல், பாதுகாப்புச் சேவைகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டில் பொறியியல் சேவைத்துறையினால் கீழ்வரும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- ஐந்துமாடிக்கட்டிட அமைப்பொன்று மகரகம,தேசிய கல்வி நிறுவகத்தில் நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டது.
- மீப்பே இல் மூன்று மாடிகள் கொண்ட விடுதி அமைத்தல் தொடர்கிறது.
- தே.க.நி. ஊழியர்களுக்கான விடுதி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.
- தேசிய கல்வி நிறுவகத்தின்மகரகம, மீப்பே வளாகத்திலும் 25மறுசீரமைப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் நிறைவுபெற்றுள்ளது.
- 02 வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டும் 01 வேலை நடைபெற்றவாறும் மின்சார விநியோகத்தின் கீழ்நீடிப்பும் மகரகம, மீப்பே வளாகங்களில்இடம்பெறுகிறது.
- இயந்திரம் மற்றும் பொறிகளின்மறுசீரமைப்பு தொடர்பில்03 பணிகள் நிறைவுசெய்யப்பட்டும் 02 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.
- தேசிய கல்வி நிறுவகத்தின்மகரகம, மீப்பே வளாகத்திலும் 05 திருத்தப்பணிகள் மற்றும் பராமரிப்புப்பணிகள் பாரிய மற்றும் சிறிய மறுசீரமைப்பு முடிந்திருக்கின்றன.
- இயந்திரம் மற்றும் பொறிகளின் 03 மீள் அமைத்தல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- நிறுவககத்தின் கட்டட பராமரிப்புப் பணிகள் பூரணப்படுததப்பட்டன.

8.4நூலகம்

நிறுவன ஆளணியினரைத் தவிர தேசிய கல்வி நிறுவகத்தின் நூலகமானது பல்கலைக்கழக பணியணியினர்கள், தேசிய கல்வியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் கலாசாலைகளினதும் பணியணியினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வியியலாளர்கள் என்ற வகையில் எல்லோரினதும் கல்வி நோக்கங்களுக்காகவும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. பின்வரும் நூல்களும் இறுவட்டுகளும் 2019 ஆம் ஆண்டில் புதிதாக நூலகத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டன.

- புத்தகங்கள் - 515
- புத்தகங்கள் (நன்கொடைகள் மூலம்) - 198
- கலைத்திட்ட சாதனங்கள் - 27
- கல்வியறிக்கைகள் - 119
- உள்நாட்டுச் சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) - 20
- உள்நாட்டுச் சஞ்சிகைகள் - 15
- வெளிநாட்டுச் சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) - 12

- வெளிநாட்டுச் சஞ்சிகைகள் - 06
- தேசிய கல்வி நிறுவக சேகரிப்புகள் - 102
- செய்தி சஞ்சிகைகள் - 05
- இறுவட்டுகள்,DVD கள் - 17

8.5 அச்சுப்பதிப்பும் வெளியீடும்

2019 ஆம் ஆண்டில் அச்சுப் பதிப்பும் வெளியீடும் தொடர்பாகக் கீழ்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

- ஆசிரியர் வழிகாட்டிகள் - 04
- பாடத்திட்டங்கள் மற்றும் மொடியுல்கள் - 11
- வள நூல்கள் - 61
- சான்றிதழ்கள் - 19
- மேலதிக வெளியீடுகள் - 97
- அழைப்பிதழ்கள் - 05
- வேறு சாதனங்கள் - 59

(நூலக அட்டைகள், பரீட்சைகளுக்கான ஆவணங்கள் முதலானவை)

இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகத்தின் கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பிலான ஆவணங்களையும் வெளியீடுகளையும் மேம்படுத்திக் கொள்வதற்காக, 04 புத்தக கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் கிடைத்திருந்தன.

EDU/C/NIE/FA/1/19

2020.09.21

:

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

தேசிய கல்வி நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்று மற்றும் சட்ட தீதியானதும் பரீட்சார்த்த தேவை தொடர்பான 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 வது உறுப்புரையின் படி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நிதிக்கூற்று

1.1 மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவை

தேசிய கல்வி நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை தொடர்பான அறிக்கை, அத்திகதியில் முடிவடைந்த குறித்த வருடத்திற்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கை, உரிமைகள் மாற்ற அறிக்கை மற்றும் குறித்த நிறைவாண்டுக்கான காசுப்பாய்ச்சல்கள் அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கைகள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுடனான 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரைக்கேற்ப 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச்சட்ட விதிகளுக்கும் ஏற்ப எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் படி எனது அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட விடயம் தொடர்பான அடிப்படை இப்பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிறுவனத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமையும், அத்தினத்தில் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல்கள் இலங்கை அரசத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை வெளிப்படுத்தும் என நான் கருதுகின்றேன்

1.2 மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விடங்களுக்கான அடிப்படை

(அ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 01 இற்கு அமைய வருமானம் மற்றும் செலவினங்களில் கொண்டுச்செல்லப்படாததும் குறித்த வருடத்தின் செலவினமாக கொண்டுச்செல்லப்பட்ட வருமானம் ரூபா.840,299.00 ஆகும்.

(ஆ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 02 இன் படி பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா.72,000.00 சொத்து விற்பனையால் கிடைத்த காசு ரூபா.2,023,600.00 மற்றும் சொத்து அகற்றலால் ரூபா.840,299.00 ஆகிய தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் குறித்தவாறு காட்டப்படவில்லை. அதே வேளை காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கங்களின் கீழ் ரூபா.2,730,570.00 குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்காக உப அட்டவணையில் கணக்காய்வுக்காக முன்வைக்கப்படவில்லை.

(இ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 07 இற்கு அமைய சொத்தினை மீள் மதிப்பிடும் பொழுது சொத்தின் வகுதி மீள்மதிப்பிடப்பட்ட போதும் இதற்கு முரணாக வாகன மீள்மதிப்பீட்டு கிரயம் ரூபா.14,600,000.00 தொகை, 04 வாகனங்கள் மீள்மதிப்பிடப்படவில்லை.

(ஈ) குறித்த வருடத்தில் முதிர்ச்சியடைந்திருந்த உண்டியலுக்காக முதலீடு செய்யப்பட்ட ரூபா.19,826,596.00 ஆகிய தொகை காசு முதலீட்டின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தமையினால் குறித்த வருடத்தில் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) கடந்த வருடத்தின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த சொத்து மீள்மதிப்பீட்டு மிகை ரூபா.521,244.00 குறைவாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தமையினால் அப்பெறுமதிக்கு குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த இருப்பின் பெறுமதியும் அதற்குறிய உப அட்டவணைக்கேற்ப இருப்பின் பெறுமதிக்குள் ரூபா.735,592.00 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்த போதும் வித்தியாசத்திற்கான அடையாளம் காணுவதற்கான தேவையான சீராக்கங்கள் செய்யப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) அமைவாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதியிடலில் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு இந்த பகுதிகளில் மீள விவரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்தினை அடிப்படையாக கொண்டு என்னால் தருவிக்கப்படும் கணக்காய்வு சாட்சிகள் போதுமாதாகவும் பொருத்தமானதாகவும் இருக்குமென நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் நிர்வாகப்பிரிவினரினதும் பொறுப்புக்கள்.

இந்நிதிக்கூற்றினை இலங்கை அரசத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரித்தலும் நியாயமான முறையில் முன்வைத்தலும் மற்றும் ஊழல் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுரீதியான் உண்மைக்கு புறம்பான தகவல்களற்ற வகையிலும் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் உள்ளக நிர்வாகத்தினரை ஒழுங்கமைத்துக் கொள்ளவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுவனத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதோடு, முகாமைத்துவம் நிறுவனத்தை நிறுத்திவிடுவதற்கு தீர்மானிப்பின் அல்லது வேறு தீர்வுகள் இல்லாதவிடத்து செயற்பாட்டினை இடைநிறுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டாழொழிய தொடர்ந்து நிலைப்பதற்கான அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்து நிலைப்பதற்குரிய விடயங்களை கண்டறிதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதியினை அறிக்கைப்படுத்தும் செயன்முறை தொடர்பான பொறுப்பினை நிர்வாகப்பிரிவினர் ஏற்றுக்கொள்வர்.

2018 இலக்கம் 18, தேசியக்கணக்காய்வு சட்டத்தின் 16(1) உபபிரிவின் படி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் முறையான ஆவணங்களையும் அறிக்கைகளையும் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றக்கள் மீதான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள் மோசடிகள் மற்றும் தவறுகளால் ஏற்படக்கூடிய அளவுரீதியான பிழையான விடயங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதற்கான நியாயமான ஒப்புதலை பெற்றுக்கொடுத்தலும், என்னுடைய கருத்துக்களடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை சமர்ப்பிப்பதும் எனது நோக்கமாகும். நியாயமான ஒப்புதல் உயர்தரமானது எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் அளவுரீதியான குறைபாடுகளை கண்டறியும் என்பதற்கான உறுதிப்படுத்தல் இடம்பெறாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனித்தனியாகவோ குழுவாகவோ . தாக்கம் செலுத்தியுள்ளமையால் அளவுரீதியாக தவறுகள் இடம்பெறக்கூடும் என்பதோடு இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படும் பொருளியல் தீமானங்கள் மீது செல்வாக்கு செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழிற்சார் மத்தியஸ்தத்துடனும் சந்தேகத்திற்கிடமின்றியும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- மோசடிகள் மற்றும் தவறுகளால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் அளவுரீதியான பிழையான அறிக்கைகளின் பாதிப்பினை இனங்காணும்போதும் மதிப்பிடும் போதும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகளால் ஏற்படும் வாய்ப்புகளை தவிர்த்துக்கொள்வதற்கு போதியளவு பொருத்தமான சாட்சிகளைப் பெற்றுக்கொள்வது எனது கருத்தின் அடிப்படையாகும். அளவுரீதியான தவறுகளுடனான அறிக்கையினால் ஏற்படக்கூடிய பாதிப்பினை விட மோசடியின் மூலம் வலுவானது என்பதுடன் தீய சேர்க்கை, போலி ஆவணங்களை தயாரித்தல், திட்டமிட்டுக் கவனத்திற் கொள்ளாதுவிடல் அல்லது உள்ளக நிர்வாகத்தினை கவனத்திற் கொள்ளாதுவிடல் போன்றன மோசடியொன்று ஏற்படுவதற்கு ஏதுவாகும்.

- சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குகளை திட்டமிடுவதற்காக நிறுவனத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பில் விளக்கத்தினை பெற்றுக்கொண்டாலும், உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் கருத்தினை வெளியிட எத்தனிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளிலும் கணக்கீட்டுத் திட்டங்களிலும் உள்ள நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இதுசார்ந்த வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் நிலைப்பு தொடர்பில் அளவுரீதியான நம்பகத்தன்மையற்ற நிலைக் காணப்படுகின்றதா? என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்களின் அடிப்படையில் கணக்கீட்டில் நிறுவனத்தின் நிலைப்பிற்கான அடிப்படையினை பயன்படுத்துவது பற்றிய பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. அளவுரீதியான சந்தேகங்கள் காணப்படுகின்றது என நான் தீர்மானிக்குமிடத்து, நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பில் கண்டறியப்பட்டவற்றின் மீது எனது கணக்காய்வு அறிக்கை கவனம் செலுத்தும் என்பதோடு அவ்வாறு கண்டறியப்பட்ட தகவல்கள் போதுமானதாக இல்லாதவிடத்து எனது கருத்தினை வலிதற்றதாக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால செயற்பாடுகள் அல்லது நிலைமைகளால் தொடர்ச்சியான செயற்பாடு இடைநிறுத்தப்படலாம்.

- கண்டறியப்பட்ட விடயங்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் முன்வைப்புக்கள், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீட்டுக்குட்படுத்தியதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மறறும் நிகழ்வுகள்

பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வுகளில் கண்டறியப்பட்ட முக்கியமான கண்றிதல்கள், பிரதான உள்ளக நிர்வாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் குறித்த நிர்வாகப்பிரினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் மேற்பார்வையின் தேவை தொடர்பான அறிக்கை

2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ்வரும் தேவைகள் தொடர்பில் விசே ஒதுக்கீடுகள் உள்ளடங்கும்.

- 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) உறுப்புரையில் காணப்படும் தேவைகளுக்கு ஏற்ப, எனது அறிக்கையின் மதிப்பீடுகள் அடிப்படைப் பிரிவின் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர கணக்காயவுக்கு தேவையான சகல தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு, எனது பரிசோதனையின்படி முறையான நிதி அறிக்கையினை நிறுவனம் பேணிச்சென்றுள்ளது.

- 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (இ) (iii) உறுப்புரையில் காணப்படும் தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட கணக்கறிக்கை முந்திய வருடத்துடன் இணங்குகின்றது.

- 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (இ) (iv) உறுப்புரையில் காணப்படும் தேவைகளுக்கு ஏற்ப 1.2 (ஈ மற்றும் ஊ) முந்திய வருடத்தில் என்னால் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகள் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

முன்னெடுக்கப்பட்ட செயலொழுங்குகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் அளவுரீதியான விடயங்களுக்கு வரையறை செய்யப்பட்டவற்றுள் கீழ்வரும் வெளிப்படுத்தல்களை செய்வதற்கான எவையும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

- 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (இ) (iv) உறுப்புரையில் காணப்படும் தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் நிருவாகச்சபையின் எவரேனும் அங்கத்தவர் ஒருவருக்கு நிறுவனத்துடன் தொடர்புடைய ஒப்பந்தமொன்று தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு வகையிலோ சாதாரண கொடுக்கல் வாங்கல்களின் நடைமுறைக்கு புறம்பாக தொடர்பு உள்ளது என்பது.

- 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (இ) உறுப்புரையில் காணப்படும் தேவைகளுக்கு ஏற்ப கீழ் வரும் அவதானிப்புக்களைத் தவிர குறித்த எழுத்துமூலமான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட கட்டளைகளுக்கு புறம்பான வகையில் செயற்பட்டுள்ளார்கள் என்பது.

சட்டத்திட்டங்கள் / கட்டளைகள்	விபரம்
(அ) 1985 ஆம் ஆண்டில் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக சட்டத்தில் 04 மற்றும் 28 ஆம் உறுப்புரை.	நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் நிதி கோவைகளுக்கேற்ப ஏற்றுக்கொள்ள முடியாது.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை (i) (ii) வது அத்தியாயத்தின் 13.3 ஆவது உறுப்புரை	
(ii) (viii) வது அத்தியாயத்தின் 6.1 வது உறுப்புரை	தாபன விதிக்கோவைக்கு புறம்பாக பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கும் பணிப்பாளர் பதவி இரண்டிற்கும் காசாளர் பதவிக்காகவும் 2015 , 2016 , 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் பதில் பணியாற்றுதலுக்காக ரூபா.478,128.00 செலுத்தப்பட்டது.
	மாதாந்த திரட்டிய சம்பளத்தை (படிகள் நீங்கலாக) அடிப்படையாக கொண்டு மேலதிக நேர கொடுப்பனவு கணக்கிடப்பட்ட போதும் 1985 மார்ச் 22 ஆம் திகதி ஏற்பட்ட D/S/811/617/94 ஆம் இலக்க உதவி தொழில் ஆணையாளரின் அறிவுறுத்தல் கடிதத்தை அடிப்படையாக கொண்டு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அடிப்படை சம்பளத்தை அடிப்படையாக கொண்டு மேலதிக நேர கொடுப்பனவு குறித்த வருடத்திற்காக ரூபா.37,226,200.00 ஆகிய

	தொகை மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த போதும் மேலதிக நேர கொடுப்பனவின் அடிப்படை நிறுவன நிர்வாக மற்றும் நிதி கோவைகளில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு முறையான அனுமதி எதுவும் பெற்றுக் கொள்ளப்படவில்லை.
(இ) திரைசேரியின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் நிறுவனத்திற்காக அனுமதியளிக்கப்பட்ட 257 ஆம் இலக்க சுற்று நிருபம்	சுற்று நிருவகத்திற்கு முரணாக 2014 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 89 உத்தியோகத்தர்களுக்கு ரூபா.6,786,256.00 தொகையும் குறித்த வருடத்தில் உத்தியோகத்தர் 09 பேருக்கு ரூபா.505,950.00 கொடுப்பனவாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த போதும் அதற்காக திறைசேரியின் அனுமதி பெறப்படவில்லை.
(ஈ) 2010 செப்டம்பர் 06 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 19 மற்றும் 2017 மார்ச் 15 ஆம் திகதியிட்ட இலக்கம் 33 யை உடைய மேலதிகமானதும் திருத்திய அமைக்கப்பட்டதுமான கொள்முதல் வழிகாட்டியின் 9.3.1 (ஆ) உறுப்புரை	ரூபா.200,000.00 மேலதிகமாக வா பழுதுப்பார்ப்பதற்காக குறித்த அமை செயலாளரின் அனுமதியின்றி குறித்த வருடத்தின் 7 சந்தர்ப்பங்களில் அமை செயலாளரின் அனுமதியின்றியே வா பழுதுபார்த்தலுக்காக ரூபா.2,861,623.00 தொகை செலுத்தப்பட்டிருந்தமை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தின் அதிகாரம் , தேவைப்பாடு மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தின் வளங்களை விளைத்திறனாகவும் வினைத்திறனாகவும் உற்பத்தி திறன்மிக்கதாகவும் காலப்பகுதிக்குள் குறித்த விதிமுறைகளுக்கு ஏற்ப ஈடுபடுத்தி உரியவாறு பயன்படுத்தாமை.

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) உயர்தர தொழில்நுட்ப பாடத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட டிப்ளோமா ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் கல்விமாணி (பொறியியல் தொழில்நுட்பம்) பட்டப்பாட நெறியின் கல்விசார் பாடநெறிக்கமைய விரிவுரை மற்றும் பிரயோக அமர்வுகள் நடத்தப்படல் வாண்மைசார் தொழில்நுட்ப

பல்கலைக்கழகத்தின் இருசாராருக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு முரணாக 2015 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டதும் 2017 ஆம் ஆண்டில் விரிவுரைகள் இடம்பெறுவது நீக்கப்பட்டிருந்தது. இதற்காக ஆசிரியர் மாணவர்கள் 211 பேருக்கு 04 பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக பாடநெறி கட்டணமாக ரூபா.52,444,398.00 பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இருசாராருக்கிடையில் ஒப்பந்தமானது கைச்சாத்திடப்படாமல் இருந்தது.

(ஆ) பாடநெறியினை நிறைவு செய்யாத 96 ஆசிரியர் மாணவர்களுக்காக பல்கலைக்கழகங்கள் 04 இற்கு ரூபா.22,644,843.00 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் பாடநெறியில் இருந்து இடைவிலகிச் சென்ற ஆசிரியர் மாணவர்களோடு ஒப்பந்தமொன்றினை நிறுவகம் மேற்கொண்டிருக்காமையினால் அவர்களிடம் இருந்து செலவிடப்பட்ட தொகையினை மீளப்பெற முடியாமல் இருந்தது.

(இ) 2009 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் 131 பேருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா.2,345,269.00 தொகையான சம்பளம் குறித்த வருடம் முடிடைந்திருந்த போதும் அதனை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாமை.

(ஈ) ஐந்து வருடங்களுக்கு மேலான காலப்பகுதிக்கு செலுத்தப்படவிருந்த வைப்பு ரூபா.1,887,031.00 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கோ பொறுப்பு வாய்ந்த காலப்பகுதியை கடந்த வைப்பை பதிவழிப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்படாமலிருந்தன.

(உ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரையான காலப்பகுதிக்குரிய செலுத்தப்படவிருந்த ஊழியர் சேமலாப நிதி மற்றும் மிகையாகிய ரூபா.68,757,865.00 ஆகிய தொகை குறித்த வருடம் முடியும் வரையும் தீர்க்கப்படாமலிருந்தன.

(எ) பாதீட்டின் நடைமுறைச் செலவினம் மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 3.9% தொடக்கம் 264.3% வரை வேறுப்பட்டிருந்தாக முன் கண்காணிக்கப்பட்டிருந்த போதும் பாதீட்டின் வினைத்திறனை முகாமைத்துவ கட்டுப்பாடொன்றாக பிரயோகிக்காமை அவதானிக்கப்பட கூடியதாகவிருந்தமை.

(ஏ) 2008 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து காணப்படும் ரூபா.45,034,652.00 ஆகிய நூலக புத்தகங்கள் தொடர்பில் பௌதிக மெய்ம்மையாக்கங்கள் காணப்படாமையால் அவை உப அட்டவணைகளுடனாக கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை.

(ஐ) குறித்த வருட முடிவில் நிறுவனத்திற்காக அங்கிகரிக்கப்பட்ட பணிக்குழாத்தினர் 652 ஆக காணப்பட்டிருந்த போதும் உண்மையில் பணிக்குழுவினர் 493 ஆக காணப்பட்டனர். இதில் வெற்றிடம் 159 ஆகும். அவ்வாறிருந்த போதும் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறித்த வருடம் முடியும் வரையிலும் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாமலிருந்தது.

(ஒ) மீபே தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்திக்கான தெற்காசிய நிலையத்தின் விடுதி கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு 2018 பெப்ரவரி 20 ஆம் திகதி நிர்மாணம் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு வருட காலம் வரையிலான ஒப்பந்தம் கல்வி அமைச்சின் பணிப்பாளரினால் (பாடசாலை கட்டிடம்) 2019 டிசம்பர் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்படடிருந்த போதும் அரச கொள்முதல் வழிகாட்டியின் உறுப்புரை 8.14.1 இன் படி ஒப்பந்தம் காலம் தாமதமாகிருந்த போதும் ஒப்பந்த விதிமுறைகளுக்கு புறம்பான காரணங்களினால் உறுதிப்படுத்தப்பட முடியாதவாறு 2020 ஜூன் 30 ஆம் திகதியன்றும் ஒப்பந்தம் முடியுறாமலிருந்தது.

டப்ளியு. பி. சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டம் மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு 19 ஆவது இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பந்திக்கு அமைவாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்குரிய தெளிவுப்படுத்தும் அறிக்கை.

1.2 நடைமுறைகள் தொடர்பான அடிப்படை

(அ) 2020 ஆம் ஆண்டுக்குரிய இறுதி கணக்குகளை தயாரிக்கையில் நியமங்களில் குறிப்பிட்டவாறு மீள்குறிப்பிட்ட (Restated) நிதிக்கூற்றுக்களினுள் இந்த பிழையை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு நியமங்களுக்கேற்ப நடவடிக்கைகளை எடுக்க பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம் (பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

மேற்குறித்த பதிலினை நிர்வாகக் குழு ஏற்றுக்கொண்டது.

(ஆ) காலதாமதமாகிய பணிக்கொடைச் செலவினை ஒதுக்குவதற்கு ரூபா.72,000.00 காசுப்பாய்ச்சல் கூற்றில் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்த அதே வேளை 2020 ஆம் ஆண்டுக்குரிய குறித்த இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2019 இல் மீள்குறிப்பிட்ட (Restated) நிதிக் கூற்றுக்களில் அது திருத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சொத்துக்களை அகற்றுவதற்கான தொகையாகிய ரூபா. 2,023,600/ தொகை காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளில் உள்ள தொகைக்கு கீழே 2020 ஆம் வருடத்திற்குறிய இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2019 இல் மீள்குறிப்பிட்ட (Restated) காசு பாய்வுகளில் சரியாக குறிப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தவறுதலாக சொத்து விற்பனை மூலம் கிடைத்த இலாபமாகிய ரூபா.840,299/ காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படவில்லை. 2020 ஆம் ஆண்டில் குறித்த இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2019 இல் மீள்குறிப்பிட்ட (Restated) காசு பாய்வுகளில் சரியாக குறிப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளில் காசுப்பாய்ச்சலின் ஏனைய சீராக்கங்களில் (other adjustments) குறிப்பிடப்பட்ட ரூபா.80,632,824/85 தொகை 2019 ஆம் வருடத்தின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது குறித்தவாறு சரிப்படுத்தப்பட்ட பின்னரும் ரூபா.2,733,570/12 ஏனைய சீராக்கங்களில் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இப் பெறுமதி மேலும் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் 2020 ஆம் ஆண்டிற்குரிய இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2019 இல் மீள்குறிப்பிட்ட (Restated) காசு பாய்வுகளில் சரியாக குறிப்பிட நடவடிக்கைகள் ஏடுக்கப்பட்டுள்ளன.

கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம்

(பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) நிலையான சொத்து மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியாகிய 2018.12.31 ஆம் திகதி இவ் வாகனத்தை திருத்துவதற்கு வாகனம் திருத்துமிடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட அதே வேளை அவ்வாகனம் முழுமையான கழற்றப்பட்டிருந்தது (Dismantle). வாகனத்தை அவதானித்து மீள் மதிப்பீடு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனமாகிய தசாநாயக்க அன் கம்பனிக்கு அவ்வாகனத்திற்காக நியாய பெறுமதியொன்றினை (Fair Value) வழங்க முடியாதிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி அவ்வாகனங்கள் நான்கு (4) 2018.12.31 ஆம் திகதி மீள் மதிப்பீடு செய்வதற்காக எடுக்கப்படவில்லை. இந்த வாகனங்கள் நான்கில் வாகனங்கள் இரண்டு பழுது பார்க்கும் நடவடிக்கைகளின் பின்னர் 2019.12.26 ஆம் திகதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2020 ஆம் ஆண்டுக்குரிய குறித்த இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2019 இல் மீள்குறிப்பிட்ட (Restated) நிதிக் கூற்றுக்களில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்ட அதே வேளை எஞ்சிய வாகனங்கள் இரண்டு 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் உள்ளடக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மீள் மதிப்பீடு நிறுவனத்தினால் குறித்த மீள் மதிப்பீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப இறுதி கணக்குகளில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம் (பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

மேற்குறித்த விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாததுடன் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இவ்வாறு காணப்படுமாயின் நிதிக்கூற்றின் குறிப்பொன்றின் மூலம் தெளிவுப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) குறித்த வருடத்தின் திறைசேரி உண்டியல் முதிர்ச்சியின் போது முதலிடப்பட்ட தொகை தவறுதலாக திறைசேரி உண்டியலின் வட்டி வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டமையினால் ஏற்பட்ட பிழை 2020 ஆம் ஆண்டில் குறித்த இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது 2019 இல் மீள்குறிப்பிட்ட (Restated) நிதிக் கூற்றுக்களில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டன.

வருடத்தின் வருமானத்தை தெளிவாக அடையாளப்படுத்திக் கொள்ள இத்தகைய கணக்கீட்டு பிழைகள் மீளவும் ஏற்படாத வகையில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம் (பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

சரியாக கணக்கிடப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ள தேவையானவற்றை பரிசீலனை செய்வதற்கான பொறுப்பு நிதிப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ) குறிப்பிடப்பட்ட மீதிகளின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக கல்வி அமைச்சின் கீழ் கிடைக்கப்பெற்ற மூலதன அளிப்பு , கல்வி அமைச்சின் மூலதன செலவினத்துக்காக கொடுக்கப்பட்டுள்ளதுடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பாதீட்டுக்குரிய நடைமுறை வருமானமாக மதிப்பிடப்பட்டது. 2018 ஆம் வருடத்திற்குரிய குறித்த நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வின் போது விசாரணை செய்யப்பட்டமையினாலும் கல்வி அமைச்சின் பிரதான கணக்காய்வாளரினால் எழுத்து மூலமாக விசாரிக்கப்பட்டமையினாலும் இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில் இம்மூலதன அளிப்பு கல்வி அமைச்சின் மூலதன செலவு தொகைக்கு பெற்றுக்கொடுக்குமாறும் அது நடைமுறை செலவினமாக கருதப்படலாகாது எனவும் குறிப்பிட்டார். (இணைப்பு 01)

மனித மூலதன அபிவிருத்தியின் கீழ் மூலதன செலவினமாக கருதி உள்ளடக்கப்பட்டு கணக்கீட்டு நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பாதீட்டினை தயாரிக்கும் போது இது தொடர்பில் கவனத்தை செலுத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி இப்பிரச்சினை தீர்க்கப்படும்

(ஊ) 2018.12.31 இடம்பெற்ற சொத்து மீள்மதிப்பீட்டுக்கு அமைய சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா.6,025,155,050/- என்றவாறு காணப்பட்டது. அன்றைய தினத்தன்று நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா.779,961,878/- ஆக காணப்பட்டது. இதன் படி மீள்மதிப்பீட்டு மிகை ரூபா.5,245,193,172/- ஆகும். (ரூபா.6,025,155,050/- - ரூபா.779,961,878/-) மீள்மதிப்பீட்டு மிகை ரூபா.5,245,193,171/41 2019 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகளுக்கு அமைய வெளிப்படுத்தப்பட்டிருந்தது.(பக்கம் 04)

கணக்கீட்டு அறிக்கை குறிப்பு இல 14 ஒதுக்க நிதியின் கீழ் இந்த மீள்மதிப்பீட்டு மிகை சரியாக சீராக்கப்பட்டுள்ளது. (ரூபா.219, 484,165.20 + ரூபா.5, 245,193,171/41 = ரூபா.5, 464,677,336/61)(கணக்கிலக்கம் 330)

2019 ஆம் ஆண்டுக்குரிய நிதி வெளிப்படுத்தல்களில் உரிமை மாற்றக் கூற்றில் மிகை மற்றும் ஏனைய ஒதுக்க தலைப்புக்களின் கீழ் 2018 ஆம் ஆண்டுக்குரிய மீள்மதிப்பீட்டு மிகையாகிய ரூபா.5,245,193,172/- தொகை ஏனைய ஒதுக்கங்களாகிய ஆய்வு மற்றும் அபிவிருத்திக்குரிய ரூபா.1,000,000/- இந்த தொகை சீராக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இத்தால் குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம் (பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

மேற்குறித்த பதிலுடன் குழு இணங்கியுள்ளது.

(எ) கடந்த காலங்களுக்குரிய தகவல்களை தேடியறிந்து இந்த கணக்கினை சமன்செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இந்த பிழையினை நிவர்த்திப்பதற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம் (பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

இணக்கக் கூற்றினை எதிர்வரும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிடம் முன்வைத்தல்.

2. ஏனைய சட்டம் மற்றும் கண்காணிப்பு தேவைப்பாடு பற்றிய அறிக்கை

(அ) 1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகத்தின் 04 ஆவது மற்றும் 28 ஆவது உறுப்புரை

தற்போது நடைமுறையில் உள்ள நிர்வாக நிதிக்கோவைகளில் காணப்படும் சட்டத்திட்ட விதிமுறைகளுக்கேற்ப இற்றைப்படுத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதுடன் இந்த திருத்தியமைக்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதி விதிக்கோவை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முகாமைத்துவ சேவை தினைக்களத்துக்கு அனுப்பி அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் முகாமைத்துவ சேவை தினைக்களத்துக்கு முன்வைத்தல்.

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் ஸ்தாபன நிதிக்கோவை

(i) இரண்டாவது அத்தியாயத்தில் 13.3 ஆம் உறுப்புரை

பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்வி) பதவிக்காக பதில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த அதே வேளை இதற்கு மேலதிகமாக அவரினால் பணிப்பாளர் (ஆசிரியக்கல்வி, பணிப்பாளர் நிறுவன அபிவிருத்தி) பதவிகளுக்காகவும் பதில்

பணியாற்றுதல் சேவையின் நிமித்தம் தேவையாக இருந்த அதே வேளை, இம் மேலதிக பதவிகளுக்காகவும் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை.

பணிப்பாளர் பதவி இரண்டில் இல் ஒன்றாகிய பணிப்பாளர் (அச்சகம் மற்றும் வெளியீடு) பதவிக்காக டபிளியு. எம். யு. விஜயசூரிய அவர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதும் அவர் இடைநிலை முகாமைத்துவ தரத்தின் (MM 1-3) 20 வருடத்திற்கு மேலாக பணியாற்றிருந்தார். அவர் தற்பொழுது பணியாற்றும் அச்சக துறையில் அறிவுமிக்க சிரேஷ்ட உத்தியோகத்தராக காணப்பட்டமையினால் பணிப்பாளர் பதவியில் பணியாற்றுவதற்கு தற்போது அமுலில் உள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி அவருக்கு நிரந்தர பதவியினை வழங்க முடியாதுள்ளது. தற்பொழுது திருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு ஏற்ப அப்பதவிக்காக புதிதாக ஆட்சேர்க்கப்படவிருக்கின்றது. இந்த சேவையின் தேவைப்பாட்டிற்கு அமைய அவரை குறித்த பணியினை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளமை.

மேலும் பணிப்பாளர் (நூலகம் மற்றும் அரும்பொருட்காட்சியகம்) பதவிக்காக பேரவையின் அனுமதியுடன் 06 மாதங்களுக்காக பதில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக 2020.10.14 ஆம் திகதி இடம்பெற்ற பேரவை அவரால் இது கால வரையில் மேற்கொண்ட பணிகள் பற்றிய அறிக்கையினை பெற்றுக்கொண்டு நேர்முக பரீட்சையொன்றை நடாத்தி அவரை அப்பதவியில் நிரந்தரமாக்குவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நாட்டில் தற்பொழுது நிலவும் கொவிட் 19 தொற்று நோய் பரவலின் காரணமாக அதை அவ்வாறு மேற்கொள்ள முடியாதுள்ளது. வெகு விரைவில் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காசாளர் பதவிக்காக, கல்வி தலைமைத்துவ மற்றும் அபிவிருத்தி பீடத்தில் முழு நேரம் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் பணியாற்றுவதற்கு இணைத்துக்கொள்ளப்படவில்லை. அதன்படி வேறு பணிகளை மேற்கொள்ளும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் காசாளராக சேவைக்கு அமர்த்தப்பட்டார். அதன்படி மேலதிக கொடுப்பனவொன்றும் செலுத்தப்பட்டிருந்தது. இந்த முகாமைத்துவ உதவியாளரினை முழு நேர காசாளராக ஈடுபடுத்தி மேலதிக தொகையொன்று செலுத்தப்பட்டது. 2020 • டிசம்பர் மாதம் தொடக்கம் இதனை கைவிடுவதென தீர்மானிக்கப்பட்டது. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள்) மூலம் (பிரதிப் பணிப்பாளர் நிதி) உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் கணக்கு வைப்பாளருக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும்.

(ii) VIII ஆவது அத்தியாயத்தின் 6.1 ஆவது உறுப்புரை

தேசிய கல்வி நிறுவகத்தின் மேலதிக நேர கொடுப்பனவை பெற்றுக்கொள்ள உரித்துடைய பணிக்குழுவினர் அலுவலக நேரத்திற்கு பின்னர் அல்லது விடுமுறை நாட்களில் பணியாற்றுவதற்காக மேலதிக நேர கொடுப்பனவுக்காக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் உள்ளிட்ட மாதாந்த கொடுப்பனவிற்காக மணித்தியாளமொன்றுக்கு 1½ மடங்கு கொடுப்பனவொன்று வழங்கப்பட வேண்டுமென 1995.03.22 ஆம் திகதியிட்ட CS/8/1/617/94 இலக்க உதவி தொழில் ஆணையாளரின் கடிதத்தின் மூலம் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 02)

அதன் செல்லுபடியான தன்மைப்பற்றி பணிப்பாளர் நாயகத்தினால் தொழில் அமைச்சிடம் விசாரித்து அறிந்த அதே தருணம் அதற்கு பதிலாக தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் உசாத்துனை ஆலோசகர் ஜி. வீரகோன் அவர்களினால் 1995.04.21 ஆம் திகதியிட்ட LAB/MIN/AD/95 என்ற இலக்கத்தையுடைய கடிதத்தின் மூலம் மேலே குறிப்பிட்ட உதவி தொழில் ஆணையாளரின் வரைவிலக்கணம் சரியானதென தெரிவிக்கப்பட்டது. (இணைப்பு 03)

அப்போது இருந்த பணிப்பாளர் நாயகத்தினால் மேற்படி தீர்மானத்தை மேலும் உறுதிப்படுத்தப்படுவதற்காக மேற்படி விடயம் தொடர்பில் சட்ட ஆலோசனைப் பெறவும் சட்டத்தரணியினால் மேற்படி தீர்மானம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டு 1995.06.16 ஆம் திகதியிட்ட E/84/95/NIC இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் உதவி தொழில் ஆணையாளரின் தீர்மானம் சரியானதென உறுதிப்படுத்தப்பட்டது.(இணைப்பு 04)

இதன்படி 1996 ஆம் ஆண்டுக்கு முன்னுள்ள 06 வருடங்களுக்கு செலுத்தப்படாமலிருந்த மேலதிய நேர கொடுப்பனவுடன் மேலே குறிப்பிட்ட உதவி தொழில் ஆணையாளரின் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டவாறு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. பிந்திய காலத்தின் வாழ்க்கைச் செலவு அல்லது வேறு படிகளோ சம்பளத்தோடு உள்ளடக்கப்படாத அதே வேளை அடிப்படை சம்பளத்துக்கு மாத்திரம் இந்நிறுவனத்தினால் (சபைகள் அல்லது நிறுவனங்களில்) ஊழியர்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட முடியும் என்ற வகையில் அந்த சம்பளத்தை அடிப்படையாக கொண்டு மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பல வருடங்களுக்கு பின்னர் மீளவும் வாழ்க்கை செலவு கொடுப்பனவு சம்பளத்தோடு பெற்றுக் கொள்ளப்படத்தக்கதாக அடிப்படை சம்பளத்தை அடிப்படையாக கொண்டு மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டிருந்தது.

2016.04.25 ஆம் திகதியிட்ட 02/2016 ஆம் இலக்கமிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 13.1, 13.2 இன் மூலம் மேற்குறித்தவாறு (அடிப்படை சம்பளத்தை அடிப்படையாக கொண்டு) மேலதிக நேரக் கொடுப்பனவை செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது.

இதன் பின்னர் 2018.04.11 ஆம் திகதியிட்ட DMS/cir/04/2018 இலக்க முகாமைத்துவ சேவை 2/2016 (ii) சுற்றுநிருபத்தின் மூலம் 2016.04.25 ஆம் திகதியிட்ட 2/2016 இலக்கமிட்ட முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 13.2, 13.3, 13.4 உப உறுப்புரை திருத்தியமைக்கப்பட்டு அச்சுற்று நிருபம் அமுலாக்குவதற்கு முன்னரான நிலைமையிலே மேலதிக நேர கொடுப்பனவை செலுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது (இணைப்பு 05, 06).

இதன்படி 2016, 2017, 2018 ஆகிய வருடங்களுக்குரிய நிலுவையாக இருந்த மேலதிக நேர கொடுப்பளவை உள்ளடக்கிய வீதத்தின் படி கணக்கிடப்பட வேண்டியதுடன் மேலதிக நேர கொடுப்பனவு செய்ய வேண்டுமென நிறுவனத்தின் தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக கேட்டுக்கொண்டிருந்தது. அந்த வேண்டுகோளினை கருத்தில் கொண்டு மேற்குறித்த உதவி தொழில் ஆணையாளரின் கடிதத்தோடு தற்போதைக்கு செல்லுபடியாகும் தன்மைத்தொடர்பில் விசாரிக்கப்படுவதுடன் அதற்கு பதிலாக 2018.08.01 ஆம் திகதியிட்ட CS/8/1/617/94 இலக்கத்தையுடைய கடிதத்தின் மூலம் 1995.03.25 ஆம் திகதி உதவி தொழில் ஆணையாளரின் கடிதத்தில் குறிப்பிட்டவாறான நடைமுறைகள் தற்பொழுதும் செல்லுபடியாகுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 07)

மேலே குறிப்பிட்டவாறு அடிப்படை சம்பளத்தை அடிப்படையாக கொண்டு மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் 1½ மடங்கு மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்தின் 424 ஆவது பேரவைக் கூட்டத்தில் ஆலோசனைக்காக முன்வைக்கப்பட்ட அதே வேளை பேரவையினால் 2018.04.11 ஆம் திகதியிட்ட DMS/cir/04/2018 இலக்கத்தையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 2/2016 (ii) இலக்கத்தையுடைய சுற்றுநிருபம் முகாமைத்துவ சேவை 2/2016 இல் 13.3 இல் உபஉறுப்புரிமையை நீக்கிவிடுவதும் 2016 முதல் நிலுவை சம்பளத்துடன் தேறிய சம்பளத்தை அடிப்படையாக கொண்ட வீதத்தை அடிப்படையாக கொண்ட மேலதிக நேர கொடுப்பனவை செலுத்துவதற்கான அனுமதியை வழங்குவதுடன் அதனை மேலும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு தெரிவித்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 08)

இதன்படி செயற்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்தினரிடம் விசாரித்தப்போது அதற்கு பதிலாக முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2019.08.16 ஆம் திகதியிட்ட DMS/1135/vol/-01 இலக்கத்தினையுடைய கடிதத்தின் மூலம் உதவி தொழில் ஆணையாளரின் மேற்குறித்த கடிதத்தின் அமைவாக மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பில் ஆட்சேபனைகள் எதுவும் இல்லையென தெரிவிக்கப்பட்டது.(இணைப்பு 09)

மேற்குறித்த நியமங்களுக்கு அமைவாக மேலதிக நேர கொடுப்பனவை மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலதிக நேர கொடுப்பனவை அடிப்படையாக கொண்ட சம்பளமானது நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் நிதிகளில் உள்ளடக்கி முறையாக அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும்.

(இ) திறைசேரி முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்காக அனுமதியளித்த 257 ஆம் இலக்க சுற்றுநிருபம்

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் பணியணியினர் வார இறுதி நாள்கள் மற்றும் அரச விடுமுறை நாட்களில் பணியின் நிமித்தம் சேவையாற்றுவதனால் பெற்றுக்கொளளும தொகை அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 50% வரையறைக்குட்பட்டதாக அமையலாகாது என அவர்களினால் கீழே குறிப்பிட்ட காரணத்தோடு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்தது.

நிறுவனத்தின் வருடாந்த திட்டத்திற்கு அமைய பல்வேறு செயற்றிட்டங்களுக்குரிய செயற்பாடுகளை திட்டமிட்டவாறு செயற்படுத்திக் கொள்ள பாடசாலை ஆசிரியர்களை செயலமர்வுகளுக்கு அழைக்கவேண்டிய அதே வேளை, அந்த ஆசிரியர்கள் குறித்த பாடசாலையில் வார நாள்களில் வேலையின் நிமித்தம் விடுகைப்பெற முடியாமையினால் வார இறுதி நாட்களில் அவர்களை பங்கு பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் நிறுவனத்தின் ஊழியர்கள் வார இறுதி நாட்களில் செயலமர்வுகளுக்காக வருகைத்தர வேண்டியள்ளது. ஆசிரியர்களுக்கான வழிக்காட்டிகளை தயாரித்தல் மற்றும் பயிற்சிகளை குறித்த காலத்தில் நடாத்தி முடிக்க வேண்டியுள்ளமையினாலும் தாமதமின்றி பாடசாலை முறைமைக்கு கற்றல் சாதனங்களை பெற்றுக்கொடுக்கவும் மேற்குறித்த பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் பணியாற்றவேண்டிருக்கின்றது. கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்ட பெறுமதி அவ் ஊழியர்களினால் பணி நேரத்துக்கு பின்னர் உண்மையாகவே பணியாற்றவேண்டிய தேவையிருப்பதாக தெரிவித்திருந்தனர். மேற்குறித்த விடயத்தினை கருத்திற்கொண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டவாறு 50% வரையறையை செயற்படுத்துவதனால் அதிக பிரச்சினைகளுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர். அதனால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட அதே வேளை 2020.06.15 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்த வரையறையை மேலும் உயர்த்திக் கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

இவ்விடயத்தினை முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அறிவித்து 257 ஆம் இலக்க சுற்று நிருபத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகளை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிவுறுத்தல் மூலம் வழங்கியிருக்கின்ற அதே வேளை அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த தொகை தொடர்பில் உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க இதற்காக திருத்தப்பட்ட செலுத்தப்பட வேண்டிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் பரிசீலனை செய்ததன் பின்னர் தீர்மானமொன்றுக்கு வருவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு வழங்கிய அறிவுறுத்தலின் படி 257 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் 50% வரையறையை முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

(ஈ) **2010.12.06 ஆம் திகதியிட்ட 19 ஆம் இலக்க மற்றும் 2017.03.15 ஆம் திகதியிட்ட 33 ஆம் இலக்க மேலதிகமாக திருத்தப்பட்ட அரச கொள்முதல் வழிக்காட்டியின் 9.3.1 (ஆ) உறுப்புரை**

கொள்முதல் வழிக்காட்டியின் படி வாகனங்களை பழுதுப்பார்த்தலுக்காக நிறுவன தலைவரின் அனுமதியின் கீழ் ரூபா.200,000.00 தொகை அனுமதிக்கப்படமுடியும். ரூபா.200,000.00 யை மிஞ்சிய வாகன பழுதுப்பார்த்தலுக்காக நிறுவன தலைவரின் அனுமதியை பெற்றுக்கொள்ள அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படவேண்டும். (3.5 / 3.6)

கொள்முதல் வழிகாட்டியின் 3.1 , 3.2 , 3.3 , 3.5 மற்றும் 3.6 கீழ் ரூபா.100 மில்லியன் வரையும் 3.4 இன் படி ரூபா.10 மில்லியன் வரையும் திணைக்கள கொள்முதல் குழுவின் அனுமதி பெறப்படவேண்டும். அதன்படி வாகன பழுதுப்பார்த்தலானது மேற்குறித்த வரையறையின் கீழ் கொள்முதல் குழுவின் அனுமதி பெறப்பட்டதன் பின்னராகும். ஒவ்வொரு வாகன பழுதுப்பார்ப்பின் போது பெறப்பட்ட கொள்முதல் குழுவின் அனுமதி இணைப்பு 10 இன் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

இதற்காக திறைசேரியின் அரச நிதி திணைக்களத்தின் தெளிவுப்படுத்தலை பெற்றுக்கொள்ள வேண்டும். அடுத்த கூட்டத்தில் இது தொடர்பான முன்னேற்றம் முன்வைக்கப்பட வேண்டும்.

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) குறித்த பல்கலைக்கழகங்கள் நான்கின் அதிகாரிகளோடு கலந்துரையாடி உடனடியாக இது தொடர்பில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு (ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்வி) கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

கல்வி அமைச்சினாலேயோ வேறு அரச நிறுவனங்களாலேயே தேசிய கல்வி நிறுவகத்துக்கு பயிற்சிக்காக மாணவர்களை அனுப்புவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல்களை தயாரித்தல்.

(ஆ) தேசிய கல்வி நிறுவகத்துக்கும் மாணவர்களுக்கும் இடையில் பிணைப்பொறுப்பொன்று காணப்படாமையினால் தற்போதைய நிலை தொடர்பில் கீழ்வரும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆசிரியர் மாணவர்களின் பிணைப்பொறுப்பு கைச்சாத்திடப்பட வேண்டியது கல்வி அமைச்சுடன் ஆகும். இதற்கு காரணமாக அமைவது பாடநெறியினை செயற்படுத்துவதற்காக கல்வி அமைச்சினாலேயே ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றமையாகும். இது தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்தினால் 2016.01.08 மற்றும் 2016.06.28 ஆம் திகதிகளில் கடிதமொன்றினால் கல்வி அமைச்சுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 11)

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

கல்வி அமைச்சினாலேயோ வேறு அரச நிறுவனங்களிளாலோயோ தேசிய கல்வி நிறுவகத்துக்கு பயிற்சிக்காக மாணவர்களை அனுப்புவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய வழிக்காட்டல்களை தயாரித்தல்.

(இ) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை 131 உத்தியோகத்தர்களுக்கு குறித்த சம்பளத்தினை விட மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையினை வசூலித்துக்கொள்வதற்காக குறித்த திருத்தியமைக்கப்பட்ட பெயர் பட்டியலைத் தயாரித்து தருமாறு நிதித்துறைக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள அதே வேளை நிதித் துறையினால் அது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் உத்தியோகத்தர்கள் நால்வரிடம் ஓய்வு பெறும் போது அறவிடப்படவேண்டிய தொகை அல்லது சேவையிலிருந்து நீங்கும்பொழுது அறவிடலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி எஞ்சியுள்ள உத்தியோகத்தர் 127 பேரிடம் குறித்த தொகையினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிர்வாகத்துறைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

உள்ளக கணக்காய்வின் மூலம் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள அறவிட்டுக் கொள்வதற்கான தொகைகளை காட்டும் பட்டியலில் வித்தியாசம் ஏதும் காணப்படுமாயின் நிதிப்பிரிவு மற்றும் நிர்வாக பிரிவின் மூலம் மாதத்திற்குள் அவ்வித்தியாசமானது அடையாளப்படுத்தப்பட வேண்டும். இதன் முன்னேற்றம் எதிர்வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் முன்வைக்கப்பட வேண்டும்.

(ஈ) 2020 ஆம் நிதியாண்டுக்கான நாளேட்டுக் குறிப்பு இலக்கம் 21 இன் மூலம் இதன் பெறுமதி வருமானத்திற்கு கொண்டுச்செல்லப்பட்டுள்ளது. (இணைப்பு 12). குறித்த மீதியினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

மேற்படி பரிந்துரையினை குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

(உ) 2006 – 2015 ஆம் ஆண்டு வரை செலுத்தப்படவேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் அதற்குரிய 50% மிகைப்பணம் ரூபா.68,757,865/ ஆகிய தொகை 2019.07.11 திகதிக்கு முன் செலுத்தப்படவேண்டுமென தொழில் ஆணையாளர் மூலம் 2019.06.21 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கப்பட்ட அதே வேளை செலுத்தப்படுதலில் இருந்து விலகிச் சென்றால் மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த தொகையை மிகவும் விரைவாக செலுத்தும் விதத்தில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. தவணையாக செலுத்துவதற்கான கோரிக்கை தொழில் ஆணையாளரிடம் விடுக்கப்பட்டுள்ள அதே வேளை ஒதுக்கீடு தேசிய பாதீட்டு திணைக்களத்துடன் கோரப்பட்டுள்ளது. இதன்படி தவணையாக செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) குறித்த விவரம் உப அட்டவணை 01 இன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

பேரவையினால் அனுமதிக்கின்ற பாதீட்டிற்கு ஏற்ப செலவினை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு நிதிப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதே வேளை ஏதாவதொரு குறிப்பிடத்தக்க தொகையில் முரணொன்று ஏற்படுமாயின் அதற்கான அனுமதி பெறப்படுகின்ற அதே வேளை வருட நடுப்பகுதியில் பேரவைக்கு திருத்தியமைக்கப்பட்ட பாதீடுவொன்றை அனுமதிக்காக முன்வைத்தல்.

(எ) 2020.03.12 ஆம் திகதியாகும் போது 45,556 நூல்கள் உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2020.06.15 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது பிரயோக பயிற்சி பெறும் பயிலுனர்வுகளை பயன்படுத்தி இப்பணியினை விரைவாக முடிவுறுத்தமுடியுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள புத்தக பரிசீலனை நடவடிக்கைகளை செயற்படுத்தி நூலகத்தில் உள்ள நூல்கள் பற்றிய சரியான தரவினை உள்ளடக்கி நூல்களின் விலைகளோடு உப அட்டவணையினை தயாரித்து நிதிப்பிரிவிடம் ஒப்படைக்குமாறு 2020.07.02 ஆம் திகதி பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் துணைச்

சேவைகள்) மூலம் பதில் பணிப்பாளருக்கு (நூலகம் மற்றும் அரும்பொருட்காட்சியகம்) அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது,

2007.12.31 ஆகும் போது கனிணி தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை	148,544
மேலும் கனிணி தரவுத்தளத்தில் விலை குறிப்பிட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை	78,946
மேலும் கனிணி தரவுத்தளத்தில் விலை குறிப்பிட வேண்டிய நூல்களின் எண்ணிக்கை	47,702
கனிணி தரவுத்தளத்தில் விலை குறிப்பிடப்படாத நூல்களின் அளவு	21,896

கனிணி தரவுத்தளத்தில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நூல்களின் பெறுமதி ரூபா.32,777,031/66 ஆகும்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

விலைக்குறிப்பிடப்படாத நூல்களின் விலைகளை அறிந்துக் கொள்வதற்கான முறைமையொன்றினை பிரேரிக்க ஆலோசிக்கப்பட்டது.

கலாநிதி டி. கெப்பட்டிகொட அவர்கள்
திருமதி. டி. மாலனி அவர்கள் (அங்கத்தவர்)
திரு. எஸ். வர்ணசிங்க அவர்கள் (அங்கத்தவர்)

(ஏ) தேசிய கல்வி நிறுவகத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட ஆளணி 652 ஆகும். 2019.12.31 ஆம் திகதி வெற்றிடங்களின் எண்ணிக்கை 159 ஆகும். இந்த வெற்றிடங்களில் 159 விரிவுரையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறாத அதே வேளை, அது உதவி விரிவுரையாளர் தரத்திலிருந்து பதவி உயர்த்தப்படுவதாகும். மேலும் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விரிவுரையாளர்களாக பணியாற்றிய உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டிருந்ததுடன் விரிவுரையாளர் பதவிக்கு 65 வெற்றிடங்கள் உள்ளன. 2013.03.01 ஆம் திகதி முதல் அமுலில் உள்ள ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய ஏனைய பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்க முடியாதுள்ளதுடன் அனேக பதவிகளுக்கு ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அதிக தகைமைகள் தேவையாக இருப்பதாக காட்டப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

மேற்குறித்த பதிலுடன் குழு இணங்கியுள்ளது.

(ஐ)

ஒப்பந்தத்திற்கு அமைய ஒப்பந்த காலம் முடிவுறும் திகதி	2019.01.03
கல்வி அமைச்சின் பணிப்பாளரினால் (பாடசாலை கட்டிடம்) வழங்கப்பட்ட கால நீடிப்புடன் கூடிய ஒப்பந்த கால முடிவுத் திகதி	2019.12.15

கால நீடிப்பு செய்வதற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- நிர்மாணத்துறையில் காணப்பட்ட பிரச்சினையான சூழ்நிலை காரணமாக மூலப்பொருள் (மணல் மற்றும் இதர பொருட்கள்) என்பவற்றை நிர்மாண இடத்திற்கு வழங்க காலதாமதமாகியது.
- மழையுடனான காலநிலை (bad weather Condition)
- உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலினால் ரூபாவுக்கு எதிராக டொலரின் பெறுமதி அதிகரித்துச் சென்றமை.
- கொடுப்பனவுகளை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டமை. (திறைசேரியின் ஒதுக்கீடுகளை பெற தாமதமாகியமை)

ஒப்பந்தக்காரர்களினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு இவ் ஒப்பந்தத்தை இரத்து செய்து மீளவும் வேறொரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைப்பதற்கு மேலதிக காலம் தேவைப்படுமாகையாலும் அரைவாசி பூரணப்படுத்தப்பட்ட கட்டிடத்திற்காக, கேள்வி மனுக் கோரல், மேலதிக செலவினமொன்று ஏற்படுத்துமாகையாலும் கால நீடிப்பு செய்வதற்கான காரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (இணைப்பு 13)

இந்த ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பு முடிவடைந்ததன் பின்னர் (2019.12.15) வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை பரிசீலனை செய்து தாமதக்கட்டணத்தை உள்ளடக்கி பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட போதியளவு காசின்மையால் மேலதிக கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படாத அதே வேளை மீளவும் 2019.12.15 ஆம் திகதி முதல் காலநீடிப்பு செய்தமையினால் தாமதக்கட்டணத்தை அறவிட்டுக்கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரை

மேற்குறித்த பதிலுடன் இணங்கமுடியும்.

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன
பணிப்பாளர் நாயகம்

உப அட்டவணை 01

திருத்தப்பட்ட பாதிட்டப்பட்ட பெறுமதி, கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் முரண்பாடுகள் கீழே தரப்படுகின்றது.

விவரம்	பிரேரித்த பாதிடப்பட்ட பெறுமதி ரூபா.	கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிடப்பட்ட வாறான பெறுமதி ரூபா.	முரண் ரூபா.	முரண் சதவிதம் %
சம்பளமும் கூலியும்	349,700,000	306,205,629	43,494,371	12
மேதிக மற்றும் விடுமுறை தினம்	32,630,000	37,226,200	(4,596,200)	(14)
பணிக்கொடை கிரயம்	10,300,000	33,362,685	(23,062,685)	(224)
போக்குவரத்து கிரயம் (உள்நாடு)	4,120,000	3,727,030	392,970	10
போக்குவரத்து கிரயம் (வெளிநாடு)	3,200,000	2,986,408	213,592	7
காகிதாதிகள்	55,590,000	52,114,010	3,475,990	6
பேணுதற் செலவும் கட்டிடமும்	11,923,000	21,162,868	(9,239,868)	(77)
பேணுதற் செலவும் அலுவலக உபகரணமும்	4,400,000	16,033,476	(11,633,476)	(264)
பேணுதற் செலவும் வாகனமும்	6,500,000	5,992,908	507,092	8
பேணுதற் செலவும் இயந்திரம் மற்றும் இலத்திரணியல் செலவு	-	2,726,572	-	-
தபால் மற்றும் விளம்பரம்	4,553,000	1,890,625	2,662,375	58
